ஈழமண்
www.eelamann.com
December 2020

# மாவீரர் வணக்கம்



முதலாவது வாயிலில் உங்களைச் சந்திப்பதில் மகிழ்வடைகின்றோம். தாயகம், தேசியம், அரசியல் இறையாண்மை என்ற ஈழத்தமிழர்களின் அரசியல் பெருவிருப்பின் வடிவமாக, தேசமாகச் சிந்தித்து, தமி ழர் தேசத்தின் நோக்குநிலையில் இருந்து ‘ஈழமண்’ இவ்வுலகைக் காண்கின்றது.

தமிழர் தாயக மக்களின் வாழ்வாதார நெருக்கடிகள், சமூக சிக்கல்கள், சுற்றுச்சூழல் சவால்கள், அரசியல் நிலவரங்கள் எனத் தாய்மண் வேரையும், அதனை விழுதாகத் தாங்கும் புலம்பெயர் உறவுகளையும் உள்வாங்கியதாக ஈழமண் தன்னை வடிவமைத்துள்ளது.

சமூக, அரசியல் விழிப்பையும், தமிழீழ போராட்டத்தின் உயிர்ப்பையும் தனது முதற்பணியாக ‘ஈழமண்’ கொண்டிருக்கும்.

தமிழர் தேசத்தின் நலன்களின் அடிப்படையில் ஜனநாயக பண்பு களுக்கு அமைய கருத்தாடல் களுக்கான ஓர் களத்தினை ஈழமண் வழங்கும்.

தமிழர்கள் அரசுக்குரியவர்கள் என்ற அரசியல் நிமிர்வினை ஈழத்தமிழர் தேசத்துக்குத் தந்த நடைமுறைத் தமிழீழ அரசினை, பெரும் இன அழிப்பொன்றின் ஊடாக அழித்த சிங்கள பௌத்தம் இன்று தமிழர் தேசத்தினை ஆக்கிரமித்து நிற்கின்றது.

ஆக்கிரமிக்கப்பட்ட ஈழத் தமிழர் தேசத்தின் சுதந்திர அரசியல் இறைமையினை மீட்டெடுக்கவும், இனஅழிப்புக்கு எதிரான ஈடுசெய் நீதியினை வென்றெடுக்கவும் உருக் கொண்ட நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்துக்கு ‘ஈழமண்’ துணை நின்று செயலாற்றும்.

**தமிழர் தலைவிதி தமிழர் கையில்**

## விடுதலைப்புலிகள் தடை நீக்கம் !



### அடுத்த கட்டம்

## தமிழர்களுக்கான அனைத்துலக உறவுக்கொள்கை

### பிரதமர் வி.உருத்திரகுமாரன்




# ஈழமண்

www.eelamann.com December 2020


# கொடிய கொரோனாவும் சிங்கள பேரினவாதமும்



**கொரோனா வைரஸ் பெருந்தொற்று காரணமாக பல புலம்பெயர் நாடுகளில் பெருந்திரளாக மக்கள் ஒன்றுகூடி மாவீரர்களை நினைவேந்த முடியாத சூழல் ஒரு புறமும், கொரோனாவை விடகொடிய சிங்கள பேரினவாத அரசின் தடைகளினால் தமிழர் தாயகத்தில் மாவீரர் நாளினை முன்னெடுக்க முடியாத சூழல் மறுபுறமும் காணப்பட்டிருந்த நிலையில் நிலத்திலும், புலத்திலும் தமிழர் வீடுகளே மாவீரர் இல்லங்களாக மாறின.**

## கொரோனா போர்களத்தில் தடுப்பு மருந்துகள் !




# தமிழர் தேசத்தின் இன்றைய வேண்டுகை

சிங்கள பேரினவாதத்தினால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள தமிழர் தேசம், தனது தேசப்புதல்வர்களை நினைவேந்துவதில் சிறிலங்கா அரசின் பெரும் சவால்களை இவ் வருடம் எதிர்கொண்டிருக்கிறது. தனது காவல்துறையினையும் நீதிமன்றங்களையும் பயன்படுத்தி மக்கள் தமது வீரப்புதல்வர்களுக்கு வணக்கம் செலுத்துவதற்குச் சிறிலங்கா அரசு தடைவிதித்திருக்கிறது.

ஈழத் தமிழர் தேசத்தினை இனவழிப்புக்குள்ளாக்கும் சிங்கள இனவாத அரசின் இச் செயல் வியப்புக்குரியதொன்றல்ல. எதிர்பார்க்கப்டாததொன்றுமல்ல. ஆனால் இத் தடையினை ஒரு அரசியல் முடிவாகக் காட்டாது சட்டம் ஒழுங்கு விடயம் போல காட்டுவதற்கு சிறிலங்கா அரசு முற்பட்டுள்ளது. கொரோனா உலகப்பெருந்தொற்றுச் சூழலையும் சிறிலங்கா அரசு இவ் விடயத்தில் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தியுள்ளது.

தமிழீழ தேசத்தின் மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்துவது தமிழீழ தேசத்தின் அரசியல் உரிமை. அவர்களது ஜனநாயக உரிமை. அடிப்படையானதொரு மனித உரிமை. உலகளாவிய மக்கள் தங்கள் தேசங்களின் மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தும் உரிமையினைக் கொண்டிருப்பது போல தமிழீழ மக்கள் இந்த உரிமையினைத் தம்வசம் கொண்டுள்ளார்கள். ஈழத் தமிழர் தேசத்தினை ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள பௌத்த பேரினவாத அரசு மாவீரர்களை நினைவுகூர்வதற்கு விதிக்கும் தடைகள் அப்பட்டமான ஜனநாயக மனிதவுரிமை மீறலாகும்.

ஈழத் தமிழர் தேசம் சிறிலங்கா இனவாத அரசின் இத் தடைகளை உடைப்பதற்கான வியூகங்களை வகுக்க வேண்டும். இதனை ஒரு நீதிமன்ற விடயமாகச் சுருக்கிக் கொள்ளக்கூடாது. நீதிமன்றங்களை அரசியல் நியாயங்களை வெளிப்படுத்துவற்கான களங்களாகப் பயன்படுத்துவது வேறு. மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்துவற்கான அனுமதியினை நீதிமன்றங்களிடம் வாதாடி வென்று விடலாம் என நம்புவது வேறு. சிறிலங்காவின் நீதிமன்றங்களும் சிங்கள இனவாத அரசின் ஒரு பகுதிதான் என்ற வரலாற்றுண்மையை நாம் மறந்து போகலாகாது. நீதின்றங்களுக்குச் செல்வதன் மூலம் தமிழர்களின் நினைவேந்தல் உரிமைக்கான அரசியல் வெளியை சிறிலங்காவின் நீதிமன்றங்களின் மூலம் பெற முடியாது என்பதனை, இனநல்லிணக்கம் பேசிப் பேசி நிலைமாறுகால நீதிக்கான வகுப்புக்களை எடுக்கும் சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தும் களமாகப் பயன்படுத்திவிட்டு, மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்துவதற்கான மாற்று உத்திகளை தமிழர் தேசம் முதலிலேயே வகுத்திருக்க வேண்டும்.


சிங்கள அரச கட்டமைப்புக்கள் மாவீரர் நாளுக்கென விதித்த தடைகளுக்கு எதிராக ஒன்றுகூடிய தமிழர் தேசியகட்சிகள், மக்களை வீடுகளில் இருந்து மாவீரர்களுக்கு விளக்கேற்றுங்கள் எனக் கூறிவிட்டு ஒதுங்கிக் கொண்டனர். குறைந்தபட்சம் மக்களைத் தத்தமது வீடுகளுக்குள் ஒதுங்கிக் கொள்ளாது வீட்டு வாசல்களிலும் மதில்களிலும் தீபங்களை ஏற்றுங்கள் என அறைகூவல் விடுத்து தமிழீழ தேசத்தைத் தீபங்களால் ஒளிரச் செய்திருக்க வேண்டும். ஆக்கிரமிப்புக்குள்ளாகி நிற்கும் நமது மக்களை ஆக்கிரமிப்பாளர்களை மூர்க்கத்துடன் எதிர்க்கும் போர்க்குணம் கொண்டவர்களாக மாற்றும் சக்தி மாவீரர்களது மூச்சுக்கு உண்டு என்பதனை நமது அரசியற் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்

மாவீரர் நாளினையோ, அல்லது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளையோ ஒரு வெறும் சடங்காக மாற்றாமல், இந்த நாட்கள் முன்வைக்கின்ற அரசியலைக் கையிலெடுத்து, அதனை மக்கள் மயப்படுத்திய அரசியல் போராட்டமாக மாற்ற வேண்டிய பொறுப்பு தமிழர் தலைவர்களுக்கு உண்டு. இதனை நோக்கிய ஆக்கபூர்வமான செயல்முனைப்பே தமிழர் தேசத்தின் இன்றைய வேண்டுகையாகவுள்ளது.


*– ஆசிரியர் பீடம் –*

## தமிழர் தலைவிதி தமிழர் கையில்

# ஆக்கிரமிப்புக்கு நடுவே தாயகத்தில் மாவீரர் தீபங்கள்










# வீடுகள் தோறும் வீற்றிருந்த மாவீரர்கள்

ஈழவிடுதலைப் போராட்டம் ஒவ்வொரு காலகட்டத்திலும் தான் சந்திக்கின்ற தடைகளை, சவால்களை எதிர்கொண்டு புதிய களங்களையும், யுக்திகளையும் கைக்கொண்டு தன்னை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியிருக்கின்றது என்பதற்கு சான்றாக உலகத்ததமிழர்களின் இணையவழி தமிழீழத் தேசிய மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் அமைந்திருத்தன.

கொரோனா வைரஸ் பெருந்தொற்று காரணமாக பல புலம்பெயர் தேசங்களில் பெருந்திரளாக மக்கள் ஒன்றுகூட முடியாத சூழல் ஒருபுறமும், கொரோனாவை விட கொடியதாக தமிழர் தாயகத்தில் மாவீரர் நாளினை முன்னெடுக்க முடியாது சிங்கள அரசின் தடைகள் மறுபுறமும் காணப்பட்டிருந்தன.

இந்நிலையில் வீடுகளே மாவீரர் நினைவு இல்லங்களாக மாறியதாக, தாயகத்தில் வீடுகளில் ஒளியேற்றிய சமவேளை, புலம்பெயர் தமிழர் வீட்டு வரவேற்பறைகளை நோக்கி, நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இணையவழி தமிழீழத் தேசிய மாவீ ரர் நாள் நிகழ்வினை முன்னெடுத்திருந்தது.

கொரோனா சுகாதார கட்டுப்பாடுகளுக்கு அமைய மட்டுப்படுத்தப்பட்ட மக்களுடன் அமெரிக்காவின் நியுயோர்க்கில் மைய வணக்க நிகழ்வு அமைந்திருக்க, ஜேர்மனியின் பேர்லின், அமெரிக்காவின் நியு ஜெர்சி பகுதிகளிலும் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

பிரான்ஸ், கனடா, ஜேர்மனி, பிரித்தானியா, சுவிஸ், டென்மார்க், நோர்வே என புலம்பெயர் நாடுகளில் இருந்து தமது வீடுகளை மாற்றிய புலம்பெயர் அடுத்ததலைமுறை, பாடல்கள், கவிதைகள், நினைவுரைகள், நடனங்கள், பேச்சுக்கள் என மாவீரர் நினைவுகளோடு இணையவழி இணைந்திருந்தனர்.

இதேவேளை முதல் வித்தாகிய லெப். சங்கரின் நினைவலைகளோடு தமிழர் தேசிய இயக்கத்தின் தோழர் தியாகு அவர்கள் பங்கெடுத்திருக்க, தமிழர் வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன் அவர்கள் மாவீரர் நினைவுரையினை தமிழ்நாட்டில் இருந்து வழங்கினார்.

தென்னாபிரிக்காவில் இருந்து பிரபல சட்டவாளர் கிறிஸ் கோவிந்தர், வட அயர்லாந்தில் இருந்து இயக்கத்தின் சர்வதேச உறவுகளுக்கான பொறுப்பாளர் டக்களஸ் மக்டெர்மொற் அவர்களும் சிறப்புரைகளை வழங்கினர்.

பிரித்தானியாவின் தமிழர்களுக்கான சர்வகட்சிக்குழுவின் தலைவர் Elliot Colburn, நாடாளுமன்ற உறுப்பினர்கள் Siobhain McDonagh, Robert Halfon, Bob Blackman ஆகியோரது கருத்துக்களும் இடம்பெற்றிருநதன.

இதேவேளை சுகாதாரக் கட்டுப்பாகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட மக்களுடன் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தன.




சிறிலங்கா அரசின் முப்படையினரின் தடைகளுக்கு மத்தியிலும் மாவீரர் நாளினை மக்கள் மாலை 6.05க்கு சுடரேற்றி உணர்வுபூர்வமாக நினைவேந்தியுள்ளனர். சைவக் குருமார், அருட்தந்தையர்கள் உட்பட முக்கிய பிரமுகர்கள் தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இராணுவத்தின் கடுமையான அச்சறுத்தல்களுக்கு மத்தியில் தங்கள் இல்லங்கள், அலுவலகங்கள், பொதுக் கட்டங்களுக்கு முன்பாக சுடரேற்றினர். இதேவேளை, யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள மார்ட்டீனார் குருமடத்துக்கு முன்பாக சுடரேற்றிய குற்றச்சாட்டில், அந்தக் குருமடத்தின் பணிப்பாளர் அருட்தந்தை பாஸ்கரன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.


மாவீரர் நினைவேந்தலை நடத்துவதற்கு சிறிலங்கா அரசாங்கம் இராணுவத்தின் மூலமாகத் தடை விதித்திருந்ததோடு, மாவீரர் துயிலும் இல்லங்களை முற்றுகையிட்டு, மக்கள் செல்ல இராணுவம் முழுமையாகத் தடை விதித்திருந்தது. இந்நிலையில், தாயகத்து மக்கள் தமது வீடுகளிலும், அலுவலகங்களிலும் நினைவேந்தலை நடத்தியிருந்தனர்.

இதேவேளை, மன்னார் பிரதேசத்தில் மாவட்ட நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவின் ஒழுங்குபடுத்தலில் மாவீரர் நினைவேந்தல் இடம்பெற்றது. இதன்போது மாலை 6.05க்கு தீபம் ஏற்றப்பட்டு உயிர் நீத்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் பெரும்பாண்மையான இடங்களில் மாவீரருக்கான நினைவு அஞ்சலி நிகழ்வுகள் அரிதாகவே காணப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சிலரே தமது வீடுகளில் தீபமேற்றினர். திருகோணமலை ஆலய வளாகங்களில் பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். இதனால் மக்கள் அச்சமடைந்து ஆலயங்களுக்குச் செல்லவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.





















# உள்ளக, வெளியக அரசியல் பரிமாணங்களைச் சரிவரப் புரிந்து கொண்டவர் தேசியத் தலைவர்!

## - வி. உருத்ரகுமாரன்



தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் வராது வந்த மாமணியாக ஈழத் தமிழர் தேசத்தின் சுதந்திர வேட்கையின் குறியீடாகத் தமிழீழ மண்ணில் வந்துதித்து 26 நவம்பர் 2020 இல் 66 ஆண்டுகள் நிறைவடைகின்றன. தேசியத்தலைவரின் பிறந்தநாளையொட்டி அவரின் அரசியல் பரிமாணத்தை வெளிப்படுத்தும் வகையில் இச் சிறு குறிப்பினை எழுதுகிறேன்.

தேசியத்தலைவரதும் விடுதலைப்புலிகள் அமைப்பினதும் இராணுவ சாதனைகளைப் புகழ்ந்துரைக்கும் ஒரு பகுதியினர் அவரது அரசியல் பரிமாணத்தைப் பற்றிப் போதியளவு புரிதல் இல்லாது கருத்துரைப்பதைப் பலர் அவதானித்திருக்க முடியும். எனது அவதானிப்பின்படி தமிழீழம் இதுநாள் வரை கண்ட அரசியல் தலைவர்களில் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களே உள்ளக, வெளியக அரசியல் பரிமாணங்களைச் சரிவரப் புரிந்து கொண்டு செயற்பட்டவராவர்.

தேசியத் தலைவர் அவர்கள் சிறிலங்கா அரசின் தன்மையினையும் சிங்கள இனவாதத்தின் போக்கினையும் சரிவரப் புரிந்து கொண்டிருந்தார். ஏனைய தமிழ் அரசியல் தலைவர்கள் போன்று இலவு காத்த கிளி போல சிங்களத்தை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தவர் அல்லர் தேசியத் தலைவர். சிங்கள இனவாதப் பூதம் என சிங்கள இனவாதத்தை வர்ணித்து இவ் இனவாதப் பூதம் தமிழ் மக்களுக்கு எந்தவித உரிமைகளையும் வழங்கப் போவதில்லை என்பதனைத் தெளிவாகவே உய்த்துணர்ந்து கொண்டு செயற்பட்டவர். தமிழ் மக்கள் கௌரவமாகவும் பாதுகாப்பாகவும் சமத்துவத்துடனும் இனஅழிப்புக்கு உள்ளாகாமலும் வாழ வேண்டுமானால் சுதந்திரமும் இறைமையும் கொண்ட சுதந்திரத் தமிழீழத் தனியரசை அமைப்பதுதான் ஒரேவழி என முரசறைந்தவர். தமிழீழ விடுதலைக்கான பேரியக்கத்தை வழிநடாத்திச் செயற்பட்டவர். இந்தப் புரிதலும் செயலும் அவரது அரசியல் பரிமாணத்துக்கு மிகத் தெளிவானதொரு எடுத்துக்காட்டாகும்.

தேசியத் தலைவர் அவர்கள் அனைத்துலக அரசியல் பரிமாணத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தார். உலக அரசியல் ஒழுங்கு அறத்தின் அடிப்படையில் இயங்குவதல்ல என்பதனையும், அது நலன்களின் அடிப்படையிலேயே இயங்குகிறது என்பதனையும் எடுத்தியம்பி, உலக அரசியல் ஒழுங்கில் ஈழத் தமிழ் மக்கள் ஒரு பொருட்டாகக் கருதப்படுவதற்குத் தமிழர் தேசம் தனது பலத்தை உச்ச அளவில் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதனையும் செயற்பாட்டு நடைமுறையாகக் கொண்டிருந்தார்.

அனைத்துலக அரசுகள் இலங்கைத்தீவில் நடப்பவை அனைத்தையும் நன்கு அறிந்து வைத்துக் கொண்டுதான் இருக்கின்றன என்பதனையும், பல சமயங்களில் தமது நலன்களுக்கேற்ப உண்மை தெரியாது நித்திரை போல நடிக்கின்றன என்ற புரிதலும் தேசியத் தலைவருக்கு இருந்தது. ஒரு சமயம் வெளிநாட்டில் இருந்து சென்ற ஆதரவாளர் ஒருவர் தேசியத் தலைவரிடம் ‘இங்கு நடப்பவை எவையும் வெளிநாட்டு அரசுகளுக்குத் தெரிய வருவதில்லை’ எனக் கூறியபோது – அப்ப அவையளுக்கு சூப்பி வாங்கிக் கொடுங்கோ – எனத் தேசியத் தலைவர் சிரித்துக் கொண்டு கூறினாராம்.

தேசியத் தலைவர் எதிர் கொண்ட பிரச்சினை ஈழத் தமிழ் மக்களின் நலன்களையும் அனைத்துலக அரசுகளின் நலன்களையும் எவ்வாறு ஒரே கோட்டில் இணைய வைப்பது என்பதே. ஈழத் தமிழ் மக்கள் உலக அரசியற் சமன்பாட்டில் ஒரு தரப்பாகக் கருதப்படும் நிலை தோற்றம் பெற்றால்தான் அதன் பின்னர் தமிழ் மக்களின் நலன்களையும் உலக அரசுகளின் நலன்களையும் இணைய வைக்க முயல முடியும் என்பதனை தேசியத்தலைவர் அவர்கள் உய்த்துணர்ந்து கொண்டார். அனைத்துலக அரசியலில் ஒரு பொருட்டாக, ஒரு தரப்பாகக் கருதப்பட்டிருக்காத ஈழத் தமிழர் தேசத்தை தேசியத் தலைவர் அவர்கள் ஒரு தரப்பாக நிலை நிறுத்தினார். தமிழீழ தேசத்துக்கான நடைமுறையரசினை ; நிறுவி தென்னாசியாவின் புவிசார் அரசியல் சமன்பாட்டில் தமிழீழத்தையும் தவிர்க்கமுடியாத தரப்பாக எழுச்சி காண வைத்தார். அரசுகளை மையப்படுத்திய உலக ஒழுங்கில் அரசில்லாத ஒரு தேசம் இவ்வளவு தூரம் முன்னேற முடிந்தது என்பதே ஒரு சாதனைதான்.

தேசியத் தலைவரால் நிறுவப்பட்ட தமிழீழ நடைமுறையரசு சமூகநீதி நிலவுகின்ற அரசாக, இயற்கையோடு ஒத்திசையும் அரசாக அமைந்தது. சாதி வேறுபாடுகள் சமூக சமத்துவத்தைத் தீண்ட முடியாத நிலை யும், பெண் சமத்துவம் போற்றப்படும் ஒழுங்கும் தமிழீழ நடைமுறையரசில் நிலவின. சுகாதாரம், சூழல்பாதுகாப்பு, கல்வி வளர்ச்சி, உட்கட்டமைப்பு போன்றவற்றில் கூடிய கவனத்தைத் தமிழீழ நடைமுறையரசு செலுத்தி வந்தது. தமிழ் மக்களின் கனவுகளுக்கு உயிர் கொடுக்கும் வகையில், உயர்ந்த அரசியல் இலட்சியங்களை நடைமுறைப்படுத்தும் வகையில் தேசியத் தலைவர் அவர்களால் தமிழீழ நடைமுறையரசு அமைக்கப்பட்டிருந்தமை தேசியத் தலைவர் அவர்களது அரசியற்பரிமாணத்தை வெளிப்படுத்தும் கண்ணாடியாக அமைந்தது.

தேசியத் தலைவர்கள் அவர்கள் இறுதி இலட்சியத்தில் மிக உறுதியாக இருந்தவர். ‘போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் இலட்சியம் மாறாது’ என உறுதியாக எடுத்துரைத்தவர். அதனை நடைமுறையிலும் செயற்படுத்திக் காட்டியவர். சவால்களை எதிர்காலம் குறித்த நம்பிக்கைகளுடன் எதிர் கொண்டவர். சிறிய தமிழீழ தேசத்தை உலக அரங்கில் நிலைநிறுத்தியவர். தமிழ் மக்களின் எழுச்சியின் வடிவமாக என்றும் தமிழ் மக்களின் மனதில் அவர் நிலைத்திருப்பார்.

# தமிழீழத் தேசியத் தலைவர் பிறந்தநாள் எழுச்சி - பிரான்சு







ஈழமணி

# தமிழர் தேசத்துக்கான அனைத்துலக உறவுக்கொள்கை

## பிரதமர் வி.உருத்திரகுமாரனின் மாவீரர்நாள் செய்தி




இறைமை தமிழ் மக்களின் கைகளில் இருக்கின்றது என்ற நோக்கு நிலையுடன், இலங்கைத்தீவில் சிறிலங்கா அரசை மட்டும் மையம் கொண்டிருக்கும் வல்லரசுகளின் ஆட்டத்தை தடுத்து நிறுத்தும் வகையில், அனைத்துலக உறவுக் கொள்கை ஒன்றை தமிழர் தேசம் வகுத்துக் கொள்ளவேண்டும் என பிரதமர் வி.உருத்திரகுமாரன் தனது மாவீரர் நாள் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதேவளை மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தும் உரிமையினையும் மறுக்கும் சிங்கள அரசுடன் உரையாடி, பேச்சுவார்த்தைகளை நடாத்தி உரிமைகளை வென்றெடுக்க முடியும் எனத் தமிழர் தலைவர்கள் எவரும் காத்திருப்பார்களேயானால் இவர்களின் நிலை இலவு காத்த கிளிகளின் கதை போல்தான் இருக்கும் எனவும் பிரதமர் வி.உருத் திரகுமாரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கத்தின் அவசியம், இறுகிவரும் சிங்கள பௌத்த பேரினவாதத்தை எதிர் கொள்ளல், சர்வதேசத்தின் நலன் சார் அரசியலை கையாளுதல், தமிழர் தேசத்துக்கான வெளியுறவுக் கொள்கை என இம்மாவீரர் நாளில் தமிழர் தேசம் வகுத்துக் கொள்ள வேண்டிய அரசியல் இராஜதந்திர செயல்வழிப்பாதை குறித்து தெளிவாக முன்வைத்துள்ளார்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திர குமாரனது மாவீரர் நாள் செய்தியின் முழுவடிவம்.

**இன்று தேசிய மாவீரர் நாள்.**

இது தமிழீழத் தேச அரசினது உருவாக்கத்துக்காகத் தமது இன்னுயிர்களை விதையாக ஈந்த தேசவித்துக்களின் திருநாள்.

தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் சமத்துவமாகவும் பாதுகாப்பாகவும் இனவழிப்புக்கு உட்படாமல் வாழ்வதற்குச் சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசு அமைதல் ஒன்று மட்டுமே தீர்வாக இருக்க முடியும் என்று உறுதியான நம்பிக்கையுடன் வரலாறு படைத்தவர்களின் பெருநாள்.

நமது தேசத்தின் பிள்ளைகளை நமது நெஞ்சக்கூட்டில் இருத்தி, அவர்களின் திருவுருவங்களை நினைந்துருகி நம் மக்களெல்லாம் அவர்களை வணங்கி நிற்கும் புனித நாள்.

ஈழத்தமிழ் மக்களின் விடுதலை மூச்சைத் தமது மூச்சாக நிறுத்திச் சுமந்து நின்றவர்கள் நமது மாவீரர்கள்.

இராணுவப்பெருங்களங்களில் பெரும்வீரம் காட்டி, அறநெறி போற்றி உலகமெங்கும் தமிழர் மாண்பை முரசறைந்தவர்கள் நம் மாவீரர்கள்.

ஈழத் தமிழர் தேசத்தின் தேசியப் பிரச்சனையைத் தமது ஈகத்தாலும் வீரத்தாலும் அனைத்துலக அரங்கில் நிலைநிறுத்தியவர்கள் மாவீரர்கள்.

உலக இராணுவ வரலாறு கண்ட மிகப் பெரும் சமர்களுக்கு ஒத்த பல சமர்களை மிகக் குறைந்த படைபலத்துடன் வெற்றி கொண்டு உலக இராணுவங்களையே மலைப்புடன் திரும்பிப் பார்க்க வைத்தவர்கள் நமது மாவீரர்கள்.

ஒரு சிறிய தேசத்தின் அரசியல் பலம் இராணுவ பலத்தின் ஊடாக கட்டியெழுப்பப்பட முடியும் என்பதனை நடைமுறையில் நிகழ்த்திக் காட்டியவர்கள் நமது மாவீரர்கள்.

உலகில் தமிழ் மக்கள் வாழும் இடங்களிலெல்லாம் மாவீரர்களை வணங்கி நிற்கும் மக்கள் அனைவருடனும் இணைந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கமும் தனது சிரம் தாழ்த்தி மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தி நிற்கிறது.

அன்பான மக்களே,

நமது மாவீரர்களை உலக அரசுகள் எதிர் கொண்ட விதம் அறத்தின் பாற் பட்டதல்ல. அநீதியின் பாற்பட்டது. அறத்தின் பாற்பட்டு இந்த உலக அரசியல் ஒழுங்கு இயங்கியிருக்குமானால் நமது மாவீரர்களை இன்று அனைத்துலகமும் கையில் தாங்கிக் கொண்டாடியிருக்கும்.

இலங்கைத் தீவில் தமிழீழத் தனியரசு அமைவது தமது நலன்களுக்கு ஒத்திசைவானதா இல்லையா என்பதே உலக அரசுகள் போட்ட கணக்கு. தமது நலன்களுடன் ஒரு போராட்டம் ஒத்திசைந்தால் உலக அரசுகளின் பார்வையில் அப் போராட்டத்தில் ஈடுபட்ட வர்கள் போராளிகள். தமது நலன்களுக்கு ஏற்றதாக இல்லாது விட்டால் அவர்கள் பயங்கரவாதிகள். இதுதான் அரசுகளின் கணக்கு.

இந்தக் கணக்கைத்தான் உலக அரசுகள் நமது போராட்டத்திலும் போட்டன. நமது போராளிகள் பயங் கரவாதிகளாக்கப்பட்டனர். பல்வேறு நாடுகளிலும் பயங்கரவாத அமைப் புகள் பட்டியலில் நமது விடுதலை இயக்கமும் இணைக்கப்பட்டது.

பயங்கரவாதம் எனும் சொல் லுக்கு உண்மையான வரைவிலக்கணமாக இருந்து அரச பயங்கரவாதத்தை மிகக் கொடுமையானவகையில் செய்து வந்த பலஅரசுகளும்எமதுபோராளிகளைப் பயங்கரவாதிகளாக்கி மகிழ்ந்தன.

இக் குற்றச்சாட்டின் நோக்கம் போராட்டத்தின் அரசியல் இலக்கை நீர்த்துப் போகச் செய்வதே. போராட் டத்தில் ஈடுபட்டவர்களைக் குற்றம் சாட்டுவதன் மூலம் போராட்டத்தின் நியாயங்களைப் பலவீனப்படுத்தும் முயற்சியே.




அரசுகளின் காட்டாட்சி நடக்கும் உலக அரசியலில் ஒரு சின்னஞ் சிறிய தேசம் தனது சக்தியனைத்தையும் திரட்டி நீதிக்காகப் போரிட்ட போதும் அத் தேசத்தின் குரல் இந்த அரசுகளின் காதுகளில் விழவில்லை.

சிங்களப் பேரினவாதம் தனக்கென ஒரு அரசை வைத்திருந்த ஒரேயொரு காரணத்தால், அந்தப் பேரினவாத அரசுடன் இசைந்தவாறு தமது நலன்களை அடைந்து கொள்வதில் அனைத்துலக அரசுகள் கொண்டிருந்த பெரு விருப்பால் சிங்களத்தின் தமிழினவழிப்புக்கும் இவ் அரசுகள் உறுதுணையாக இருந்தன.

இது மாவீரர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் உலக அரசுகள் இழைத்த ஓர் அநீதி. அரசுகள் ஆடையணிவதில்லை எனவும் அவை நலன்களைத்தான் ஆடைகளாக அணிந்து கொள்பவை எனவும் கூற்றொண்டுண்டு. இந் நலன்மைய உலக ஒழுங்கில் சிங்கள பேரினவாதத்தை எதிர்த்து மட்டுமல்ல, இந்த அரசுகளிடமும் நாம் நீதி வேண்டிப் போராட வேண்டியவர்களாக உள்ளோம்.

இதன் அர்த்தம் நாம் இந்த அரசுகளை எதிரிகளாகக் கருதுகின்றோம் என்பதல்ல. இந்தியா மற்றும் மேற்குலக அரசுகளை நட்புச் சக்திகளாக அணுகும் நிலைப்பாட்டைத்தான் நாம் கொண்டிருக்கிறோம்.

இருந்தும் நமது விடுதலை இயக்கத்தின் மீதும் மாவீரர்கள் மீதும் இந்த அரசுகள் சுமத்தியுள்ள பயங்கரவாதிகள் என்ற குற்றச்சாட்டை எதிர்த்து நமது சக்திக்கு உட்பட்ட வகையில் நாம் போராடித்தான் ஆக வேண்டும்.

இது மாவீரர்களுக்கு நாம் செய்யும் மரியாதைஎன்பது மட்டுமல்ல, போராடும் தமிழீழ தேசத்துக்கும் அத்தியாவசியமானது. இந்த அரசுகளின் பயங்கரவாதப் பட்டியல் அரசியல் சார்ந்தது தான். கிடைக்கும் அரசியல் மற்றும் நீதிப் பொறி முறைகளுக்குள் அதனை எதிர்த்து நிற்பதுவும் ஓர் அரசியல் போராட்டம் தான். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றுடன் இப் போராட்டமும் இணைக்கப்பட வேண்டியது எனவே நாம் கருதுகிறோம்.

இந்தப் போராட்டத்தைத் தான் நாம் அண்மையில் பிரித்தானியாவில் மேற்கொண்டிருந்தோம். இந்தியா விலும் மேற்கொள்கிறோம். பிரித்தானியாவில் விடுதலைப்புலிகள் அமைப்பு மீது பயங்கரவாதப் பட்டம் சூட்டித் தடை விதிக்கப்பட்ட முறை பிழையானது எனத் தீர்ப்பாயம் கூறியுள்ளது.

இது ஒரு சிறிய வெற்றிதான். ஆனால் அரசொன்றின் முடிவு தவறு என வெளிப்படுத்தப்பட்டது முக்கியமானதொரு வெற்றி. இதன் இறுதி முடிவு அரசு சார்பாகப் போகவும் கூடும். இருப்பினும் அரசுகளின் தமிழர் விரோத முடிவுகளை தொடர்ச்சியாக் கேள்விக்குள்ளாக்கி அரசியல் முடிவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் உத்தி சார்ந்த செயற்திட்டத்தை நாம் வகுத்துச் செயற்பட்டு வருகிறோம்.

அன்பானவர்களே,

நாம் இன்று நெருக்கடியானதொரு அரசியற் காலகட்டத்தை எட்டியிருக்கிறோம். இலங்கைத் தீவில் சிங்களப் பேரினவாதம் தன்னை மேலும் வலுப்படுத்தியிருக்கும் நிலையை கடந்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் நாம் அவதானிக்க முடிகிறது.

சிங்கள அரசியல் சேனநாயக்கா, பண்டாரநாயக்கா குடும்பங்களைக் கடந்து இப்போது இராஜபக்ச குடும்பத்தை மையம் கொண்டுள்ளது.

தமிழர் ‘ஆக்கிரமிப்பை’ வெற்றி கொண்ட நவீன துட்டகைமுனுக்களாக இராஜபக்ச சகோதரர்கள் தம்மைச் சிங்கள மக்கள் மத்தியில் வெளிப்படுத்திக் கொள்கிறார்கள். தமது யுத்தகள வெற்றியினை அரசியல் முதலீடாக மாற்றியிருக்கிறார்கள்.

இந்நிலையில்சிங்களப்பேரினவாதத்தை மேலும் சிறிலங்கா அரசில் இறுக்கமாக நிலைநிறுத்தும் வேலைகளை அவர்கள் முன்னெடுப் பார்கள்.

இலங்கைத்தீவில் என்றும் சிங்கள பௌத்த மேலாதிக்கம் வளர்ந் தோங்கத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் அவர்கள் செய்வார்கள்.

இதனை இன்னொரு வகையில் சொன்னால் சிங்களத்தின் தமிழின அழிப்பு இனிவரும் வருடங்களில் இன்னும் தீவிரமடையும்.

இங்கு தமிழின அழிப்பு என்பது தமிழ் மக்கள் ஒவ்வொரு வரையும் பௌதீகரீதியாகக் கொன்றொழிப்பதைக் குறிக்கவில்லை. மாறாக இலங்கைத்தீவில் தமிழர் தேசம் என்றதொரு அரசியல் அலகை இல்லாது ஒழிப்பதைத் தான் குறிக்கிறது. தமிழ்மக்களின் தேசத் தகைமைகளை அழித்தொழிப்பதைத்தான் குறிக்கிறது.

இது சிங்கள பௌத்த இனவாத அரசின் நீண்டகால இலக்கு. சிங்கள அரசைத் தலைமை தாங்கும் எந்தத் தவைர்களும் இதனைச் செய்வார்கள். தமிழர்களுடனான யுத்தத்தை வென்றதாக வெற்றி முரசம் கொட்டும் இராஜபக்சக்களுக்கு இதனை ஒரு படி கூடுதலாகச் செய்யும் விருப்புண்டு. இதன் மூலம் சிங்கள மக்களின் வரலாற்றில் நீங்கா இடம் பிடிக்கும் ஐதீகக் கனவுகளும் அவர்களுக்கு உண்டு. இதனால்சிங்களத்தின்ஆக்கிரமிப்பு தமிழ் மண்ணில் மேலும் தீவிரமடையும்.

[தொடர்ச்சி 5 ஆம் பக்கம்]

# மாவீரர் உரை தொடர்ச்சி...



கொரோனா உலகப்பெருந் தொற்று அரசுகளுக்குத் தந்துள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்தித் தமிழர் தேசத்தின் அரசியற் குரலை மேலும் நசுக்கவும் தமி ழர் தேசத்தின் வளர்ச்சியை மேலும் நறுக்கவும் இவர்கள் முயல்வார்கள்.

தமிழ் மக்கள் தமது மாவீரர் களுக்கு வணக்கம் செலுத்தும் உரிமையினையும் இவர்கள் மறுப்பார்கள். இவர்களுடன் உரையாடி, பேச்சு வார்த்தைகளை நடாத்தி நமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் எனத் தமிழர் தலைவர்கள் எவரும் காத்திருப்பார்களேயானால் இவர்களின் நிலை இலவு காத்த கிளிகளின் கதை போல்தான் இருக்கும்.

தமிழ் மக்களுக்கு சிங்கள பௌத்த பேரினவாதத்தை எதிர்த்து அரசியல் வழியில் போராடு வது மட்டும்தான் இப்போதுள்ள தவிர்க்க முடியாதவொரு தெரி வாக இருக்கும். இந்தப் போராட்டம் அடக்குமுறைச் சட்டங்களை எதிர்த்து சட்ட எல்லைகளைத் தாண்டிக் கிளர்ந்தெள வேண்டும். சிறிலங்காவின் அடக்குமுறைச் சட்டங்களுக்குட்பட்ட அடையாள எதிர்ப்பை மட்டும் காட்டுவது உரிய பயனை வழங்கப்போ தில்லை.

மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தும் விடயத்தில் மக்கள் சட்ட எல்லைகளையெல்லாம் தாண்டி தமது சுதந்திர வேட்கையை வெளிப்படுத்துவார்கள் என்பது எமது நம்பிக்கை.

சிங்கள அரசு, தமிழர் தேசத்தை அழித்தொழிக்கும் கைங்கரியத்தை அனைத்துலக அரசுகளைத் தமக்குச் சாதகமாகக் கையாள்வதன் மூலம் நடை முறைப்படுத்தலாம் என எண்ணு கிறது.

இந்து மகா சமுத்திரம் உலக வர்த்தகத்தில் வகிக்கக்கூடிய பங்கு காரணமாக இதன் முக்கியத்துவம் 21 ஆம் நூற்றாண்டில் மேலும் வளர்ச்சியடையக் கூடியதொரு சூழலும், இலங்கைத்தீவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடவமை வும், இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகள் இலங்கைத் தீவில் காட்டும் அக்கறையும் உலக அரசு களைக் கையாளும் வாய்ப்பைத் தமக்குத்தரும் என இராஜபக்சக்கள் கருதும் நிலை உண்டு.

மேலும் அமெரிக்கா தலைமை யிலான அரசுகள் மேற்கொண்ட ஆட்சிமாற்ற ஆட்டத்தை சிங்கள பௌத்த தேசியவாதத்தின் துணை யுடன் இராஜபச்சக்கள் முறியடித்து பெருவெற்றி கொண்டிருக்கிறார்கள். இந் நிலையில் தம்முடன் பேரம் பேசி நலன்களை உறுதி செய்து கொள்வதை விட வேறுவழியேதும் உடனடியாக இல்லை என்பதனை அனைத்துலக அரசுகளும் புரிந்து கொண்டிருப்பார்கள் எனவும் இராஜ பக்சக்கள் எண்ணுவதற்கு இடமுண்டு.

இலங்கைத்தீவில் வல்லர சுக ளின் ஆட்டம் சிறிலங்கா அரசை மட்டும் மையம் கொண்டி ருப்பத னைத் தடுத்து நிறுத்துவது என் பதைத் தமிழர் தேசம் தனது உத்தியாக வகுத்துக் கொள்ள வேண்டும். இதற்கு தமிழர் தேசத் துக்கான அனைத்துலக உறவுக் கொள்கை வகுக்கப்படுவதோடு தமிழர் தேசத்தின் இறைமை தமிழ் மக்களின் கைகளில் இருக்கின்றது என்ற நோக்குநிலையுடன் தாயகத் தமிழ் அரசியற் தலைவர்கள் செயற்பட வேண்டும்.

தமிழர் தாயகத்தின் நில கடல் வளங்கள் தமிழர் தேசத்துக் குரியவை என்ற அரசியல் நிலைப்பாட்டைத் தமிழ்த் தலைவர்கள் பகிரங்கமாக முன்வைக்க வேண்டும். தமி ழர் தாயகத்தின் எந்தப் பகுதிகளை யும் அனைத்துலக அரசுகள் பயன்படுத்துவதானால் தமிழ்த் தலைவர்களின் சம்மதம் பெறப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட வேண்டும். அதனை மீறி மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் அனைத்தையும் எதிர்த்துத் தமிழர் தாயகத்தில் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இப் போராட்டங்கள் நாடாளுமன்ற பகிஸ்கரிப்பு போன்ற வடிவங்களை எடுக் கும் போது அவற்றின் மீது அனைத்துலகக் கவனம் குவி யும்.

இவற்றையெல்லாம் தாய கத்தில் செய்வதற்குரிய அரசியல் விருப்பு தாயகத் தலைவர்கள் பல ரிடம் இருக்கிறதா என்பது இங்கே முக்கி யமானதொரு கேள்வியாக எழுகிறது.

மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்துவதில் அரசியல் தலை வர்கள் காட்டும் அக்கறை உண் மையானதாக இருக்கும் பட்சத்தில் தமிழர் தேசத்தை அனைத்துலக



அரசுகள் மத்தியில் தனித்துவமான தரப்பாக நிலைநிறுத்துவதில் தமிழ்த் தலைவர்கள் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டும்.

இலங்கைத்தீவில் தமது நலன்களை அடைந்து கொள் வதில் இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற அரசுகளுக்கிடையே ஏற்படக்கூடிய போட்டி, புவி சார் அரசியல் சார்ந்து தமிழ் மக்களுக்குத் தரக்கூடிய வாய்ப்புக்களை இனங்கண்டு உரிய வியூகங்களை வகுக்க வேண்டிய கடமை தமிழர் தேசத்துக்கு உண்டு.

இவ் விடயத்தில் ஈழத் தமிழ்த் தாயகத்தையும், புலம்பெயர்ந்த தமிழ் மக்களையும், தமிழ்நாட்டு மக்களையும், உலகத் தமிழ் மக்களையும் இணைத்து ஒரே தரப்பாக நாம் நிலைநிறுத்த வேண்டும்.

இதற்கான முன்னெடுப் பினைத் தாயக மக்களிடையே தேசிய நிலைப்பாட்டுடன் தேர் தலில் நின்று வெற்றி பெற்ற மக்கள் பிரதிநிதிகள் கூட்டாக நின்று மேற்கொண்டால் அது கூடுதல் மட்ட அனைத்துலக அக் கறையினைப் பெறும். தாயகத்தில் எடுக்கப்படும் இம் முயற்சிகளுக்கு உரிய ஆதரவை நாடுகடந்த தமி ழீழ அரசாங்கம் வழங்கும்.

அன்பான மக்களே,

நாம் ஒரு தேசமாக நம்மை அடையாளப்படுத்திக் கொண்டா லும் அரசில்லாத ஒரு தேசமாகவே இன்று இருக்கிறோம்.

ஏறத்தாழ 90 மில்லியன் மக்கள் தொகையினைக் கொண்ட தமிழ் மக்கள் கூட்டத்துக்கென உலகில் ஒரு நாடு இன்றில்லை. ஓர் அரசு இல்லை.

உலகில் தமிழ் மக்களுக்கென வொரு அரசு வலுவாக இருந் திருக்குமானால் முள்ளி வாய்க் கால் தமிழினவழிப்பு நடப்பதற் கான நிலைமைகள் உருவாகி யிருக்காது.

நாம் அரசற்ற தேசமாக இருப்ப தனால் சிறிலங்கா அரசுக்குள் கட்டுண்டு போயிருக்கிறோம். இதனால் எம்மிடையே ஈழத் தமி ழர் தேசம் குறித்த சுதந்திரமான சிந்தனைகளைக் கட்டுப்படுத்தும் நிலைமைகளே உள்ளன. இந் நிலையிலிருந்து நாம் விடுபட வேண்டும்.

மேலும் உலகநோக்கில் இருந்து பார்க்கும் போது அரசுகள் என்ற முறைமைக்குள்ளும் நாம் சிக்குண்டு போயிருக்கிறோம். இதனாற்தான் வல்லரசுகள் இலங்கைத்தீவில் அடைந்து கொள்ள முயலும் நன்மை கள் உள்நாடு சார்ந்தவையாக மட்டும் அமைவதில்லை

அரசுகளின் இந்து – பசுபிக் சமுத்திரப் பிராந்திய வர்த்தக, பொருளாதாரப் போட்டியில் இலங் கைத்தீவும் முக்கியமான கேந்திர முக்கியத்துவத்தைப் பிடித்துக் கொள்கிறது. வர்த்தக, பொருளாதார நன்மைகளை நிலைநிறுத்த இராணுவ நட வடிக்கைகளையும் இவ் அரசுகள் மேற் கொள்வதுண்டு.

இருப்பினும் அவ்வாறு நடக்கும்போது தமது இராணுவ நடவடிக்கைகளுக்காக பாது காப்பு சார்ந்தும், ஜனநாயகம் சார்ந்தும், அறம் சார்ந்தும் காரணங்களை அரசுகள் கூறிக் கொள்வதுண்டு. அரசுகள் இவ் விடயத்தில் நேர்மையற்றதொரு இரட்டைநிலையில் தான் இருந்து வருகின்றன.

இருந்தபோதும் நாம் அனைத் துலக அரசுகளின் ஆதரவுகளை எமக்குச் சார்பாக வென்றெடுக்க வேண்டிய அவசியம் உண்டு.

பல தலைவர்களும் அதிகா ரிகளும் தம் அரச பொறுப்பில் இருக்கும் போது பின்பற்றாத, பேசாத உண்மைகளைப் பின்னர் பேசுவார்கள். காலம் தாழ்ந் தென்றாலும் உண்மைகள் வெ-ளிவர இவை உதவுவதுண்டு.

உதாரணமாக, முள்ளிவாய்க் கால் இனவழிப்பு நடைபெற்ற போது அமெரிக்க அதிபாராக இருந்த ஒபாமா அவர்கள் அண்மையில் வெளியிட்ட தனது நூலில் அங்கு நடைபெற்றது இனவேட்டை (ethnic slaugh-ter) எனக் குறிப்பிட்டுள்ளார்.

முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற தமிழினவழிப்புத் தொடர்பான அனைத்துலக விசாரணைக் கோரிக் கைகள் நலிவடைந்து போகவில்லை.

சிங்களத்தின் தமிழினவழிப்பு என்றோவொரு நாள் உலகின் மனச்சாட்சியைத் தட்டி தமிழர் தேசத் துக்கான வாய்ப்புகளைத் திறக்கும் என்ற நம்பிக்கையுடன் நிலைப்பாட்டை, நீதியை மதிக்கும் மானுட சமூகத்தின் மீது கொண்ட நம்பிக்கையாக நாம் வரித்துக் கொள்வோம்.

நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும். நம் மாவீரர் கனவு பலிக்கும் என்ற நம்பிக்கையுடன் அணி திரள்வோம். நம்மால் இயலக்கூடிய அனைத்து வழி களிலும் மாவீரர் கனவை நன வாக்க உழைப்போம் என உறுதி எடுத்துக் கொள்வோம்.

தமிழரின் தலைவிதி
தமிழரின் கையில்!
தமிழரின் தாகம்
தமிழீழத் தாயகம்!

## சிறப்பு பக்கம்

# விடுதலைப்புலிகள் தடை நீக்கம் !

## அடுத்த கட்டம் என்ன ?

### 90 நாட்களுக்குள் தாருங்கள் : பிரித்தானிய அரசாங்கம்

### விவகாரத்தை பாராளுமன்றத்துக்கு கொண்டு வாருங்கள் - நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான பிரித்தானியாவின் தடைக்கு எதிரான நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சட்டப் போராட்டத்தின் முதல்கள வெற்றியினைத் தொடர்ந்து தீர்வு தொடர்பான தனது அடுத்த கட்ட வாதுரைகளை தடைசெய்யப்பட்ட அமைப்புகளுக்கான மேல்முறையீட்டு ஆணையத்திடம் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் முன்வைத்துள்ளது.

பயங்கரவாத தடைப்பட்டியலில் விடுதலைப்புலிகளை தொடர்ந்தும் வைத்திருக்கும் பிரித்தானிய உள்துறையமைச்சரின் செயல் சட்டமுறைமைக்கு முரணானது என இவ் ஆணையம் தனது தீர்ப்பில் (ஒக்ரோபர் 21ம் தேதி) முன்னராக வழங்கியிருந்தது.

இத்தீர்ப்பு தொடர்பில் அடுத்து வருகின்ற 28 நாட்களுக்குள் எழுத்துப்பூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற நிலையில் பிரித்தானிய உள்துறைஅமைச்சின் சட்டத்துக்கு முரணான தடை நடவடிக்கை குறித்து, சட்டமுறைப்படி தமிழீழ விடுதலைப்புலிகளை தடைநீக்கம் செய்யும் ஆணையை, உள்துறையமைச்சர் நாடாளுமன்றத்தில் முன் வைப்பது மட்டுமே உரிய அடுத்த நடவடிக்கையாக அமைய வேண்டுமென நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது வாதுரையில் தெரிவித்துள்ளது.


“விடுதலைப் புலிகளை தடை செய்யப்பட்ட பட்டியலில் இட்டது பாராளுமன்றம் என்றபடியால், அதனை அப்பட்டியலில் இருந்து நீக்குவதா அல்லது தொடர்வதா என்ற முடிவினை பாராளுமன்றமே எடுக்க வேண்டும். மேலும் சிறிலங்காவில் இருந்து பிரித்தானியாவுக்கு பாதுகாப்பு தேடி வந்த தமிழ் உறவுகள், பிரித்தானியாவிலும் தொடர்ந்து தமிழீழ கோரிக்கைக்கான முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்கு, அவர்கள் மீதிருக்கும் பயங்கரவாத முத்திரை நீங்குவதற்கு இத்தடை நீக்கம் வழி சமைக்கும் எனவும் இத்தடை நீக்கம் மனித உரிமைகளின் அடிப்படையிலான தமிழர்களுடைய பேச்சு சுதந்திரத்தினையும், கருத்து சுதந்திரத்தினை முழுமையாக எந்தவித அச்சமும்மின்றி அனுபவிக்க வழிகோலும் எனவும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமரும், சட்டவாளருமாகிய வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரித்தானிய அரச தரப்பும் தமது வாதுரைகளை ஆணையத்திடம் எழுத்துமூலமாக முன்வைத்துள்ள நிலையில் வழக்கு விசாரணையின் போது வாதிட்டது போலவே, இப்போதும் தடை தொடர்பான முடிவினை எடுக்க தமக்கு இன்னொரு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என வாதுரைத்துள்ளதோடு, 90 நாட்களுக்குள் முடிவினை தாம் எடுப்பதாக ஆணையத்திடம் தெரிவித்துள்ளது. உள்துறை அமைச்சரின் வாதத்தினை ஏற்றுக் கொண்டால், உள்துறை அமைச்சு தமி ழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் தடைப்பட்டியலில் இடும் பட்சத்தில் இந்த தடைக்கு எதிரான சட்டநடவடிக்கை மீண்டும் ஆரம்பத்தில் இருந்து எடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் வாதத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீர்வு தொடர்பாக இன்னுமொரு விசாரணை வேண்டுமா, அல்லது எழுத்து மூலமான வாதுரைகளின் அடிப்படையில் முடிவெடுக்கலாமா என்பது தொடர்பில் தடைசெய்யப்பட்ட அமைப்புகளுக்கான மேல்முறையீட்டு ஆணையம் பரிசீலித்து வருகிறது.

பிரித்தானிய உள்துறை அமைச்சின் தடையினை நீக்குகின்ற அதிகாரம் இந்த ஆணையத்துக்கு இல்லாதுவிட்டாலும், இத்தீர்ப்பின் அடிப்படையில் அரசியல் ரீதியான கொள்கை முடிவினை பிரித்தானிய அரசு எடுக்க வேண்டிய கட்டத்துக்கு கொண்டு செல்லும் வகையில் பிரித்தானிய பாராளுமன்றத்துக்குள் இவ் விடயத்தினை கொண்டு செல்லும் செயல்முனைப்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஈடுபடத் தொடங்கியுள்ளது.

# தடைநீக்கத்துக்கான செயல்முனைப்பில் பிரித்தானிய வாழ் உறவுகள் எப்படி பங்கெடுப்பது ?




பிரித்தானிய வாழ் தமிழ் உறவுகள் ஒவ்வொவரும் தாம் வாழும் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருக்கு மின்மடல் ஒன்றினை அனுப்பும் ஏற்பாட்டினை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

விடுதலைப்புலிகள் மீதான பிரித்தானிய அரசாங்கத்தின் பயங்கரவாத முத்திரை என்பது, பிரித்தானிய வாழ் தமிழர்கள் மீதான முத்திரையாகவும் இருக்கின்ற நிலையில், அதனை நீக்கம் செய்வது முக்கியமானதென இதன் செயற்பாட்டு இயக்குனர் திரு. தாமோதரம் முருகதாஸ் அவர்கள் தெரிவித்துள்ளார்.

https://www.tgte-homeland.org/ இணையத்தளத்திற்கு சென்று இந்த மின்மடலை ஒப்பமிட்டு தானியக்கமாக தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருக்கு அனுப்பி வைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

In 2018, the Transnational Government of Tamil Eelam (TGTE) applied for the Libeartion Tigers of Tamil Eelam (LTTE) to be removed from the proscribed organisations list in the United Kingdom. Unfortunately, the Home Office decided to continue the proscription.

However, an appeal to the Proscribed Organisations Appeal Commission (POAC) has led to the commission issuing an open judgment on 21 October 2020.

The POAC found that the information presented to the then Home Secretary when he made his decision to maintain the LTTE on the list of proscribed organisations "materially misstated" the conclusions reached by the Proscription Review Group (the expert body whose role it is to assess the threat posed by groups who are considered for proscription under the Terrorism Act 2011). POAC also found that the submission inaccurately summarised the views of JTAC (the Joint Terrorism Analysis Centre). POAC considered these to be a "serious concern" and therefore held that the decision to maintain the LTTE on the list of proscribed organisations was flawed.


We are now urging the Home Secretary Rt. Hon. Priti Patel to remove the proscription on the LTTE. We need your support for this.

Please use this online tool to contact your Member of Parliament (MP) with a request to write to the Home Secretary calling for deproscription.

All you need to do is enter your post code, so we can find your MP and generate an email to send out. Then please provide your full name and address so your MP can take action.

It only takes a minute, and you can help determine the outcome in this very important initiative.

## பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்துறை அமைச்சருக்கு கடிதம்



**Siobhain McDonagh MP**
House of Commons
London SW1A 0AA
020 7219 4678 (tel)
*mcdonaghs@parliament.uk*

Rt Hon Priti Patel MP
Home Secretary
Home Office
2 Marsham Street
London
SW1P 4DF

24th November 2020

Dear Home Secretary,

**RE: Liberation Tigers of Tamil Eelam**

I have recently been contacted by large number of constituents regarding the judgment of the Proscribed Organisations Appeal Commission about the Liberation Tigers of Tamil Eelam (LTTE).

I understand that the Proscribed Organisations Appeal Commission considered that your predecessor, Home Secretary Rt Hon Sajid Javid MP, made his decision to extend the proscription of Liberation Tigers of Tamil Eelam on the basis of misrepresented information concerning the judgement of both the Proscription Review Group and the Joint Terrorism Analysis Centre.

I would be grateful if you could clarify for me as to what action you intend to now take.

Yours sincerely,

Siobhain McDonagh

**Siobhain McDonagh MP**

தடைசெய்யப்பட்ட அமைப்புகளுக்கான மேல்முறையீட்டு ஆணையம் வழங்கிய தீர்ப்பினைத் அடிப்படையாக கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கோரும் கடிதங்கள் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களால் உள்துறை அமைச்சருக்கு அனுப்பட்டு வருகின்றது.

தமிழர்களுக்கான அனைத்துக் கட்சிக்குழுவும் உள்துறை அமைச்சருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் Siobhain Mc Donagh அவர்களும் அனுப்பியுள்ளார்.

## சிறப்பு பக்கம்

# மாவீரர் வாரத்தை கையிலெடுத்த புலம்பெயர் இளந்தலைமுறை !

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அடுத்த தலைமுறையான “அலைகள்” மாவீரர்களை நினைவேந்தும் மாவீரர் வாரத்தினை கையெலெடுத்து பலரது பாராட்டுக்களை பெற்றுள்ளனர்.




பிரித்தானியா, பெல்ஜியம், அமெரிக்கா, கனடா, ஒஸ்றேலியா, பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மனி, நோர்வே என புலம்பெயர் தேசங்களில் பிறந்து வளர்ந்து வரும் இளந்தலைமுறையினர் உணர்வெழுச்சியுடன் மாவீரர் வாரத்தினை இணைவழிமூலம் நொவெம்பர் 21-26 ஆகிய நாட்களுக்கு தொடர்ச்சியாக முன்னெடுத்திருந்தனர்.

தியாகம், ஒழுக்கம், வீரம், அர்ப்பணிப்பு, தலைமை, பெண்கள் என ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தொனிப்பொருளில் நிகழ்வினை நேரஞ்சலாக முன்னெடுத்திருந்ததோடு, பெண்களே முன்னின்று இதனை செயலாற்றியிருந்தமை இங்கு குறிப்பிடதக்கது.

# ஐ.நாவின் கவனத்தில் மாவீரர் நாளுக்கான தடை



மாவீரர்நாளுக்கு சிறிலங்கா அரச கட்டமைப்புக்கள் விதித்துள்ள தடைகள் தொடர்பில் ஐ.நாவின் இரண்டு சிறப்பு அறிக்கையாளர்களின் கவனத்துக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கொண்டு சென்றிருந்தது.

ஒன்றுகூடும் சுதந்திரத்துக்கான சிறப்பு அறிக்கையாளர், கருத்துச் சுதந்திரத்துக்கான சிறப்பு அறிக்கையாளர்களின் கவனத்துக்கு சர்வதேச மனித உரிமைகள், சட்டங்களுக்கான வல்லுனர்கள்Global Diligence LLP மையத்தின் ஊடாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இந்த நடவடிக்கையினை எடுத்துள்ளது. முன்னராக தியாகி லெப். கேணல் திலீபனினின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு சிறிலங்கா அரச கட்டமைப்புக்கள் விதித்த தடை தொடர்பிலும், இவ்வாறான முறைப்பாட்டை ஐ.நாவின் இவ்விரு சிறப்பு அறிக்கையாளர்களின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டிருந்ததோடு, இது தொடர்பில் சிறிலங்கா அரசு தனது கடுமையான எதிர்வினையை நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்துக்கு எதிராக வெளிப்படுத்தியிருந்தமை இங்கு குறிப்பிடதக்கது.

# மாவீரர் வாரத்தினை நினைவேந்திய அரசவை

வழமைபோல் மாவீரர் வாரத்தினை கருத்துரைகள், கவிதைகளுடன் மாவீரர் வாரத்தினை அசரவை கூடி தொடங்கிவைத்தது.

துணை அரசவைத்தலைவர் ரஜனி செல்லத்துரை அவர்கள் அரசவையினை உணர்வுபூர்வமாக நடாத்தியிருந்தார்.

## நாடுகடந்த தமிழீழ அரசாங்க அரசவையில் கொசோவோ - ஆர்மேனிய உயர்தலைவர்கள்



நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அமர்வில் கொசோவா நாட்டு துணை அதிபர் Haki Abazi, ஆர்மேனிய அரசவைத் துணைத்தவைர் Van Krikorian ஆகியோர் சிறப்புரையாற்ற இருக்கின்றனர்.

டிசெம்பர் 5.6 ஆம் தேதிகளில் இடம்பெறுகின்ற அரசவை அமர்வின் தொடக்க நாள் நிகழ்வில் இணையவழி காணொளி மூலமாக ஈழத்தமிழர்களின் நீதிக்கும், அரசியல் இறைமைக்குமான போராட்டத்துக்கு தமது தோழமையினை இவர்கள் தெரிவிக்க இருக்கின்றனர்.



# இனநாயகத்தின் பிரதிபலிப்பாகவுள்ள சிறிலங்காவின் நீதித்துறை

சிறிலங்காவின் உள்நாட்டு நீதிப்பொறிமுறையில் தமிழர்களுக்கான நீதி கிடையாது என்பதோடு, தமிழர்களுக்கான அரசியல்வெளி இல்லை என்பதனை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தும் ஓர் களமாக, மாவீரர் நாளுக்கான சிறிலங்காவின் அரச கட்டமைப்புக்களின் தடைகள் அமைந்துள்ளன என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்திருந்தது.

இனநாயக மயப்படுத்தப்பட்ட சிறிலங்காவின் அரச கட்டமைப்புக்களின் ஒன்றான நீதித்துறை, போர் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களை தண்டிக்காது அவர்களை விடுத்து,நீதிவேண்டி போராடும் பாதிப்புக்கு உள்ளான மக்களை அச்சத்துக்கு உள்ளாக்கும் செயல்களையே முன்னெடுத்து வருகின்றது.

இனநாயகத்தின் பிரதி பலிப்பாகவுள்ள சிறிலங்காவின் நீதித்துறை என்பது, சிங்களவர்களுக்கு இடையிலான பிரச்சனைகளுக்கு நீதியனை நிலைநாட்டலாம்.

ஆனால் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான பிரச்சனைகள் எனும் போது, அது இனநாயகத்தின் ஓர் கருவியாகவே சுதந்திர காலம் தொட்டு இயங்கி வருகின்றது.

தமிழர்கள் ஈடுசெய் நீதியினை வேண்டிவந்த நிலையில், சர்வதேச சமூகத்தினால் முன்வைக்கப்பட்ட நிலைமாறுகால நீதியின் முறையே, தமிழர்களுக்கான நீதிக்கு சிறிலங்காவில் இடம் இல்லை என்பதனையே இவைகள் வெளிக்காட்டி வருகின்றன. என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# மக்கள்மயப்பட்ட போராட்டகளமே தடைகளை உடைக்கும்

சிறிலங்காவின் நீதி மன்றங்களை, பாராளுமன்றத்தை யாவற்றையும் ஒருகளமாக கொண்டு, தமிழர்களுக்கான நீதியோ, அரசியல் வெளியோ இல்லை என்பதனை இன்னும் வீச்சாக சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்த வேண்டுவதோடு, சர்வதேச நீதிப்பொறிமுறையே தமிழர்களுக்கான நீதியைப் பெற்றுதரும் என்பதனை இடித்துரையுங்கள். மக்கள் மயப்பட்ட அரசியற் போராட்டகளமே அனைத்து தடைகளையும் உடைக்கின்ற ஆயுதமாக மாறும். தமிழர்களுக்கான நீதியையும், அரசியல் உரிமைகளையும் வென்றெடுப்பதற்கான புதிய புதிய களங்களாக இவைகள் உருவாகட்டும் என்பதனையும் உரிமையோடு வேண்டுகிறோம் என தமிழர் தாயக அரசியல் தலைவர்களை நோக்கி வேண்டுகோள் ஒன் றினை நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவ காரங்களுக்கான அமைச்சு விடுத் திருந்தது.

# முக்கிய பேசு பொருளுடன் கூடும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை !

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சிறப்பு அரசவைக் கூட்டம் எதிர்வரும் டிசெம்பர் 5ம்,6ம் தேதிகளில் கூட இருக்கின்றது. மாதம் தோறும் இணையவழி தொழில்நுட்பத்தின் ஊடாக கூடுகின்ற நாடுகடந்த தமிழீழ அரசாங்கமானது, வருடத்தில் இரு தடவைகள் நேரடி அரசவை அமர்வுகளை கொண்டதாகவுள்ளது.

தற்போது கொரோனா வைரஸ் பெருந்தொற்று காரணமாக நேரடி அரசவை அமர்வினை மேற்கொள்ள முடியாத நிலையில், இணையவழி சிறப்பு அரசவை அமர்வு இடம்பெறுகின்றது.

அசரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் இடம்பெறுகின்ற இவ்வமர்வில் “இந்தியப் பெருங்கடல் அரசியலில் தமிழர்களை ஒரு தரப்பாக மாற்றுதல்” என்ற தொனிப்பொருளில் இடம்பெற இருக்கின்றது.

இதேவேளை அமைச்சுக்களின் அறிக்கை, அரசவை உறுப்பினர்கள் உரைகள், கேள்வி பதில், தீர்மானங்கள் என நேரடி அரசவை அமர்வுக்குரிய விடயங்களோடு இடம்பெற இருப்பதோடு, முதன்நாள் தொடக்க நிகழ்வில் சிறப்பு பிரதிநிதியொருவரின் சிறப்புரையொன்றும் இடம்பெற இருக்கின்றது.





# தாய்நிலம்





# மயிலந்தமடு மேச்சல் தரை மேய நினைப்பது யார்?

"தென்தமிழீழத்தின் மயிலத்தமடு மேச்சல் தரை பிரச்சனை சமீபத்திய காலங்களில் ஊடகங்களின் வெளிச்சத்து வந்திருந்தது. தென் தமிழீழத்தின் தமிழர் நிலங்கள் மீதான ஆக்கிரமிப்பின் உச்சகட்டமாக இதனை அவதானிக்ககூடியதாகவுள்ள நிலையில் இதுபற்றிய ஓர் பார்வை "

இன்று நேற்று ஆரம்பித்தது அல்ல. பல வருடங்களுக்கு முன்னே ஆரம்பித்த விடயம். போர் சூழல் காலத்தில் இந்த பிரச்சனை இருந்த போதும் சுமுகமாக தீர்த்து வைத்து மேச்சல்தரையாகவும் பயன்படுத்துபட்டு வனபிரதேசமாகவும் பாதுகாக்கபட்டது. கடந்த எழு மாதங்களாக இந்த மயிலத்தமடு மேச்சல் தரயை யார் மேய்வது என்பது தீவிரமாக்கப்பட்டது.

இலங்கை தீவு சுதந்திரம் பெற்றபோது சுமார் 7500 சதுரகிலோமீற்றர் பரப்பு கொண்ட மட்டக்களப்பு மாவட்டம் கிட்டத்தட்ட 4500 சதுரகிலோமீற்றர் பரப்பிற்கு மேலாக துண்டாடப்பட்டு சிங்கள குடியேற்றமும் இடம்பெற்று அம்பாரை மாவட்டமாகவும் மாற்றம் அடைந்து மட்டுப்படுத்தபட்ட மட்டு மாவட்டம் கிழக்கில் அதிகம் பெரும்பான்மை தமிழர் வாழும் மாவட்டமாக தொன்மைதொட்டு விளங்கிவந்தது. இம் மக்களின் பிரதானமாக விவசாயமும் மாடு வளர்ப்புமே பண்பாட்டியல் சார்ந்த விடயமாக இருந்துவருகின்றது.

அந்த வகையில் சுமார் 250,000 மாடுகள் வளர்க்கப்பட்டு வருவதும் யாவரும் அறிந்த விடயம். இந்த நிலையில் வேளான்மை நெற்பயிர்ச்செய்கை ஆரம்பித்ததும் மாடுகள் மேச்சல்தரை நிலங்களுக்கு மாற்றப்படுவது வழக்கம். இதில் தான் மயிலத்தமடு மேச்சல் தரை பிரதானம். இங்கு அம்பாரை, மட்டக்களப்பு மாடுகள் எல்லை பாகுபாடு இன்றி இன பேதமின்றி மேய்ந்து வர சிங்களபேரினவாத அரசு இதனை தான் மட்டும் மேய ஆரம்பித்த நிலை இன்று உச்சக்கட்டம் அடைந்தது.

குறித்த பிரதேசம் வனப்பிரதேசமாகையால் இது மேச்சல்தரையாக காலகாலம் நீதிமன்ற அனுமதியும் பெற்று பாதுகாக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் திடீரென சோளன் பயிர்ச்செய்கைக்கு என சிங்கள விவசாயிகளுக்கு மேச்சல்தரையை தாரைவாத்து சிங்கள குடியேற்றம் அமைக்க தீவிரமானது எம் பேரினவாத அரசு. இதனை முன்னெடுக்க கிழக்கு மாகான ஆளுநர் உள்நுளைந்தார்.

குறித்த பிரதேசம் மகாவலி திட்டத்தில் உள்ளடங்கியதை அறிந்தும் மத்திய அரசின் அதிகாரப்பிரிவிற்குள் இருப்பது கூட அறியாமல் ஆளுநர் அதிகாரம் தலைதூக்கிய காரணம் என்ன? பிரதேச செயலாளரின் கடமை பொறுப்பு ஏன் மழுங்கடிக்கப்பட்டது?

இந்த பிரச்சனை உச்ச நிலையை அடைய மட்டு அரசாங்க அதிபர் உள்நுழைந்து ஊடக காணொளி வெளியான அடுத்த கணமே அரச அதிபரை மாற்ற காரணம் என்ன?

இவை இவ்வாறு இருக்க இந்த மேச்சல்தரை விவகாரம் தொடர்பாக ஆளுநர் இது தேசிய பிரச்சனை எனவும் சோளன் செய்கைக்காக குறித்த காணியை வழங்கி பொருளாதர முன்னேற்றநடவடிக்கை என அரசு முன்னெடுத்துள்ளதாகவும் கூறினார்.

இலங்கையின் பால் உற்பத்தியில் கிடைக்கும் வருமானத்தை விடவா சோளன் உற்பத்தியில் பொருளாதார முன்னேற்றம் ஈட்டுகின்றது. பால் உற்பத்தியில் பொலனருவை மாவட்டம் பெறும் பங்களிப்பினை வழங்கி வருகின்றது என மார்புதட்டும் அரசுக்கு தெரியாதா பொலனருவை பால் உற்பத்தியில் பெறும் பங்களிப்பு மட்டக்களப்பு பால் உற்பத்தி என்று. ஏன் இதை மறைத்து பெருமையடைகிறது. மட்டக்களப்பு பால் உற்பத்தியில் பாலின் உள்ள வென்னெயின் அளவிற்க்கு ஈடு இனையாக எங்கும் கிடையாது என்ற உண்மையினை அரசுக்கு தெரியாதோ என்னமோ.

நிலப்பரப்பில் மட்டக்களப்பை விட அதிகளவான விவ சாய நிலத்தை கொண்ட அம்பாரை விவசாயிகளுக்கு இந்த மேச்சல்தரையினை தானா சோளம் பயிற்செய்கைக்கென அரசு வழங்க வேண்டும். அதுவும் காடுகள் அழிப்பது நாட்டிற்கு கேடு என தெரிந்தும் மேச்சல் தரையாகவும் காடுகளாக பசுமை பேணி வரும் இவ் வனத்தை அழித்து பயிர்செய்ய காரணம் என்ன? மாகாண நிருவாகம் செய்யவென பொருப்பேற்ற மாகாண ஆளுநர் அரசில் செய்ய காரணம் என்ன? இது தொடர்பான தகவல் பெற முனைந்த ஊடகவியளாளர் எச்சரிக்கப்பட காரணம் என்ன?

மயிலத்தமடு மாதவனை பகுதியில் இருந்து தமிழ் பண்ணையாளர்கள் பலத்த போராட்டத்தின் பின் கனத்த இதயத்துடன் கண்ணீர் துளியுடன் காணிகளை விட்டு படிப்படியாக வெளியேறிவருகின்றார்கள். அபிவிருத்தி என்ற மாயையிலே ஆளும் கட்சி சார்ந்த தமிழ் அரசியல்வாதிகளுக்கும் தேசிய கொள்கை என்று எதிர்த்து மக்கள் ஆதரவை தக்க வைக்கும் அரசியல்வாதிகளுக்கும் மாலை கட்டும் மக்களே! எங்களை அறியாமலே நாங்கள் ஏமாற்றுபட்டுகொண்டிருக்கின்றோம். ஆதிகார வர்க்கம் அவர்களது தரகர்கள் மூலம் அபிவிருத்தி எனும் மாயையில் மிதக்கவிட்டு மட்டக்களப்பு 75% தமிழர்கள் என்ற கட்டமைப்பை உடைத்து எமது எதிர்கால இருப்பை உடைத்தெறிய சதி நடக்கின்றது விழித்துக்கொள்ளுங்கள். மயிலத்தமடு மேச்சல்தரையை மேய நினைப்பது ஐந்தறிவு மாடுகள் இல்லை பேரினவாத அரசியல் சானக்கியம்.














# தமிழர் தாயகத்தை ஊடறுத்த புயல்

### யாழ்ப்பாணம்





### தொண்டமானாறு



### காரைநகர்



### கொடிகாமம்



### வல்வெட்டிதுறை







### மன்னார்



வங்காள விரிகுடாவில் உருவான “புரெவி”ப் புயல் தமிழர் தாயகத்தின் கிழக்குத் திசையிலிருந்து திருகோணமலைக்கும் – முல்லைத்தீவுக்கும் இடையே கரையைக் கடந்து, கடுங்காற்றுடன் அனர்த்தங்களை விளைவித்தபடி வவுனியாவைத்தாண்டி, முன்னேறி, மன்னாரைக் கடந்து, தமிழகத் திசையை நோக்கி கடந்து சென்றிருந்தது.

## தாயக சிறுவர்களுக்கு பரிசாக வெளிவந்துள்ளது ‘அறிந்திரன்’




தாயக சிறுவர்களின் எண்ணங்களை மேன்மைப்படுத்த அறிந்திரன் சிறுவர் சஞ்சிகை வெளிவந்துள்ளது. டிசெம்பர் மாதம் முதல் இதழாக வெளிவந்துள்ள இச்சஞ்சிகையினை சமீபத்தில் மழலை ஒன்றின் முதலாது பிறந்த நாள் நிகழ்வின் போது குழந்தைகளுக்காக காட்சிப்படுத்தபட்டு பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

“தற்போது எமது சமூகத்தில் ஒழுக்க நெறி குறைந்துள்ளது. இளைஞர் வன்முறை அதிகரித்துள்ளது. சமூகம் ஒருவித நோயோடு பயணிப்பதாகத் தோன்றுகிறது. அதனின்று சமூகத்தை மீட்டெடுக்க அரசியலுக்கு அப்பால் பல நடைமுறைகளை மேற்கோள்ள வேண்டும் என்பது பலரது கருத்து.

சமூகத்தை விழிப்புணர்வுபெறச் செய்ய வேண்டும். அவர்களை அறிவு ரீதியாக



மேம்படுத்த வேண்டும். அதற்கு அவர்களை வாசிகத் தூண்ட வேண்டும். பொதுவாக வாசிப்புப் பழக்கம் அருகிவரும் நிலையே காணப்படுகிறது. அதுவும் குறிப்பாகச் சிறுவர்கள் பெருப்பாலும் வாசிப்பதில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதற்குக் காரணங்கள் பல உண்டு. அவற்றுள் கல்வி முறையையும், சமூகச் சூழலையும் சில காரணங்களாகக் குறிப்பிடலாம்.

தற்போது தொலைக்காட்சிகளுக்குள்ளும், தொடுதிரைகளுக்குள்ளும் தம்மைத் தொலைத்திருக்கும் சிறுவர்களை அதனின்று மீட்டெடுக்க வேண்டும். அதுவும் தற்போது ஏற்பட்டிருக்கும் கொரோனா சமூக முடக்கம் இன்னும் அந்த நிலைமையை மிகவும் மோசமாக்கியுள்ளது.

அது மட்டுமல்லாது நாற்று மேடைகளில் இருந்து எமது பணியைத் தொடரலாம் என்ற சிந்தனையில் தற்போது “அறிந்திரன்” என்ற சிறுவர் சஞ்சிகை உருவாக்கப்பட்டுள்ளதாக அதன் ஆசிரியரால் தெரிவிக்கப்பட்டுள் ளது.

ஈழமண்

# “வேரும் விழுதும்”

**“புலம்பெயர் உறவுகளின் வேராக இருக்கும் தாய்மண்ணின், வாழ்வாதார தேவைகளை தாங்கும் விழுதுகளாக இருக்கும் புலம்பெயர் உறவுகளின் பதிவுகள் இது.”**






சிறுதுளி பெருவெள்ளம் என்பர். அவ்வாறு புலம்பெயர் உறவுகளிடமிருந்து இதுவரை சிறுகச்சிறுகச் சேர்த்த 5 கோடி இலங்கை ரூபாய்க்கு மேலான தாயக மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை செய்த அமைப்பாக “காந்தள்” இருக்கின்றது.

புலம்பெயர் இளையோரின் தாயக உறவுகளுடன்பாசம்பகிரும்பயணம்என்ற அடைமொழியுடன் பிரித்தானியாவில் துளிர்விட்டது இந்தக் காந்தள்.


சப்பித்துப்பிய போரின் வாழ்வில் இருந்து பிரித்தானியாவுக்கு புலம்பெயர்ந்த இளைஞர்கள் நட்புவட்டத்திடத்தில் தோன்றிய எண்ணமே “தாயக மக்களுக்கான உதவி”. அந்த எண்ணம் 2015ம் ஆண்டில் தோற்றம்பெற இதுவரை 400க்கும் மேற்பட்ட வாழ்வாதார திட்டங்களை தாயகத்தில் முன்னெடுத்துள்ளது. கையேந்தும் நிலையில் அல்லாது சுயமாக நிமிர்ந்து நிற்கும் வகையில் உதவிகளை பெறும் உறவுகள் இருக்க வேண்டும் என்ற நோக்கோடு, சுய தொழில்வாய்ப்புக்களைஉருவாக்கும்செயற்திட்டங்களையே முதன்மை நோக்காக கொண்டு காந்தள் இயங்கி வருகின்றது.

குறிப்பாக தமது பிள்ளைகளை கல்விச்செயற்பாடுகளுக்கு அனுப்ப முடியாது தவிக்கின்ற வறுமைக்கோட்டுக்குள் கீழ் இருக்கும் குடும்பங்களை அடையாளங்கண்டு. அவர்கள் வாழும் பகுதிகளில் கற்றல் கூடங்களை உருவாக்கி அதனை செயற்படுத்தி வருகின்றது.

காந்தள் அறிவுச்சோலை, காந்தள் கற்றல்கூடம், காந்தள் அறிவுக்கூடம் என்று வறுமைநிலை பகுதிகளில் இயங்கி வரும் இக்கற்றல் கூடங்களில் 250க்கும் மேற்பட்ட பிள்ளைகள் எதுவித கட்டணமும் இன்றி பயின்று வருகின்றனர். இங்கே ஆசிரியர்களாக முன்னாள் போராளிகளது குடும்பத்தை சேர்ந்தவர்கள் பணியாற்றி வருவதோடு, அவர்களுக்கான கொடுப்பனவாக மாதாந்தம் 8000 ரூபா வரை வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவளை மாவீரர் பெற்றோர்களுக்கான மாதாந்த கொடுப்பனவாக மாதாந்தம் 5000 ரூபா, முன்னாள் போராளி களிள் பிள்ளைகளின் உயர்கல்விக்கு 5000 இருந்து 8000 ரூபா வரை மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த உதவியினை பெறுகின்றவர்களின் எண்ணிக்கை சொற்பமாக இருந்தாலும், உதவியினை வேண்டுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகவே காணப்படுவதாக காந்தள் அமைப்பினர் தெரிவிகின்றனர்.

காந்தள் மூலம் உதவியினை பெற விரும்பும் உறவுகள் முறையாக அதற்குரிய விண்ணப்பப்படிவத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும். இதேவேளை அந்தந்த காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப உதவிகளையும் தேடிதேடி வழங்கப்படுகின்றது.










**காந்தள் அமைப்பின் ஊடாக தாயக மக்களுக்கு உதவிசெய்ய 00 44 7581 541888**

**தாயக தொடர்பாடல் அமைச்சு - நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்**

தொடர்புகளுக்கு :
கனடா : 00 1 647 783 34 66
பிரித்தானியா : 00 44 7519 654 794
ஜேர்மனி : 0049 160 637 2458
**mail : pmo@tgte.org**

# கருத்துக்களம்

« மாவீரர் நாளினை தாயகத்தில் முன்னெடுப்பதற்குதமிழ்அரசியல்தலைவர்கள் கையாண்ட நடைமுறைகுறித்த தாயக அரசியல் விமர்சகர்களது கருத்துக்களின் பிழிவு »

## அடுத்த மாவீரர் நாளுக்கு முன்னரான வேலைத்திட்டம் தேவை

மாவீரர் நாளில் சுடரேற்ற முடியாத நிலையும் துயிலுமில்லங்கள் படையினரால் நிறைக்கப்பட்டிருந்தமை, தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுக்கும் கட்சிகளும் தலைமைகளும் மக்களை பலவீனப்படுத்தப்படுகின்றனர் என்பதை கூர்மையாக அவதானிப்போரால் புரிந்து கொள்ள முடியும்.

இதற்கும் வழமையைப்போல அரசாங்கத்தைக் குற்றம் சாட்டி விட்டு இவர்கள் தப்பி விடுவர். சனங்களிடம் ஏற்பட்டுள்ள கோபத்தை அரசின் பக்கமாகத் திருப்பி விடுவதே இதன் பின்னால் உள்ள அரசியல் தந்திரம். வாக்கு வங்கி அரசியலுக்கான முதலீடு இது. அடுத்த தேர்தல்களில் இதை நீங்கள் தெளிவாக அவதானிக்கலாம்.

ஆனால், இதில்தங்களுடையதவறுகள், இயலாமைகளைப்பற்றி இந்தக்கட்சிகளும் அவற்றின் தலைமைகளும் சிந்திக்கப்போவதுமில்லை. அதற்குப் பெறுப் பெடுக்கப் போவதுமில்லை. கடந்த ஆண்டும் (2019 நவம்பரிலும்) கோத்த பாய ராஜபக்ஸவே அதிகாரத்திலிருந்தார். ஆனால், மாவீரர் நாள், முள்ளிவாய்க்கால் நினைவு கூரல்களை மக்கள் தொடரக் கூடியதாக இருந்தது. இரண்டுக்கும் இடமளித்தே சிங்களப் பெரும்பான்மை வாக்குகளை ராஜபக்ஸ தரப்பினர் பெற்றனர். அப்படியிருக்கும்போது இந்த ஆண்டு ஏற்பட்ட நெருக் கடிக்குக் காரணம் என்ன?

இந்த நெருக்கடி ஏற்படுத்தப்பட்டதற்கான காரணம், அதற்கு யார் பொறுப்பு என்பதை காய்தல் உவத்திலின்றி ஆராய்வது அவசியம். வழமையைப்போல மக்களை நினைவு கூரும் நடவடிக்கைகளில் ஈடுபட விட்டிருந்தாலே நெருக்கடிகள் உருவாகியிருக்காது. பதிலாக முன்னர் குறிப்பிட்ட கட்சிகளும் அவற்றின் அரசியல்வாதிகளும் இதைத் தங்கள் அரசியலுக்காக கையில் எடுக்க முனைந்ததே சிக்கலை உருவாக்கியது.

அதாவது நினைவு கூருதலை நடத்துவதற்கு அனுமதி வேண்டும் என ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதிக் கேட்டது தொடக்கம் மாவீரர் துயிலுமில்லங்களில் தங்கள் பிரசன்னங்களை முன்னெடுத்தது வரையில். மக்களின் பிரதிநிதிகளும் அவற்றின் கட்சிகளுக்கும் இதில் உரிமை உண்டல்லவா! என இந்த இடத்தில் யாரும் கேள்வி எழுப்ப முடியும்.

அதை மறுப்பதற்கில்லை. அவர்களுக்கு அதற்கு உரித்துண்டே. ஆனால் அது கட்சி நலன்களுக்கு அப்பால் மக்களின் நலன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இதைக் குறித்து குறித்த கட்சிகளும் தலைமைகளும் கூடி ஒரு பொதுத் தீர்மானத்தையும் பொது வேலைத்திட்டத்தையும் உருவாக்கியிருக்க வேண்டும். அவ்வாறு ஒரு பொதுத்தீர்மானத்தையும் பொது வேலைத்திட்டத்தையும் பற்றிக் கடந்த காலத்தில் பலரும் வற்புறுத்தியுமிருந்தனர். அதைச் செய்யாது விட்டு விட்டு, தத்தம் அரசியல் நலன் நோக்கில் இதைக் கையாள முற்பட்டமையே தவறு. அதிலும் இதை ஒரு விவகாரமாக்கும் நோக்கில். சரி, அப்படித்தான் அனுமதியை ஜனாதிபதியிடம் (அரசாங்கத்திடம்) கோரியிருந்தாலும் அதற்கு இடமளிக்கப்படவில்லை என்றால், அடுத்த கட்டமாக என்ன செய்வது என்ற தீர்மானமோ திட்டமிடலோ இவர்களிடமிருக்கவில்லை. மக்களை அணி திரட்டி மாற்று நடவடிக்கையை முன்னெடுக்கும் திராணியும் இவர்களிடமிருக்கவில்லை.

**- கருணாகரன்**

## மக்களை அணி திரட்டும் திராணி இல்லை

ஈழத் தமிழர்கள் தமது விடுதலைக்காகப் போராடி உயிர்நீத்தவர்களை பகிரங்க, கூட்டு நிகழ்வுகள் ஊடாகப் பொதுவெளியில் நினைவுகூருவது என்பது அவர்களின் சுயநிர்ணய உரிமையின்பாற்பட்டது.

இதற்கு இலங்கை ஒற்றை ஆட்சி அரசிடமோ அல்லது அதன் நீதித்துறையிடமோ அனுமதிகோருவது என்பது ஈழத்தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமைக்கு இலங்கை அரசிடம் அனுமதி கோருவதற்கு ஒப்பானது.

இந்தவகையில், பகிரங்க நினைவுகூரல் நிகழ்வுகளை முன்னெடுக்கவிடாது முற்றிலும் தடுக்கப்பட்டிருப்பதை ஈழத்தமிழர் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பை மேற்கொண்டிருக்கும் கொழும்பு அரசின் அடிப்படை உரிமை மறுப்பாக மட்டுமல்ல, தொடரும் இன அழிப்பு நடவடிக்கையின் ஓர் அங்கமாகவும் ஈழத்தமிழர்களின் அரசியல் தரப்புகள் அணுகவேண்டும்.

சுயநிர்ணய உரிமை என்பது இலங்கை ஒற்றையாட்சிப் பாராளுமன்றத்திற்கு அப்பாற்றப்பட்ட ஈழத் தமிழர் தேசத்தின் உரிமை. சர்வதேசச் சட்டமரபில் இதை இணைபிரிக்கப்பட முடியாத (inalienable right) ஓர் உரிமை என்று கூறுவார்கள். இதை இயற்கைச் சட்டம் என்றும் பிறப்புரிமை என்றும் கூட அழைக்கலாம். அதாவது, எந்த ஓர் அரசுடைய சட்டவாக்கத்தாலும் மறுக்கப்படமுடியாத ஓர் உரிமை.

ஜனநாயக விழுமியத்தோடு சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தைச் செய்ய முன்வருமாறு இளந்தலைமுறைக்கு அனைத்துத் தமிழ் அரசியற்கட்சிகளும் இணைந்து ஒரு வேண்டுகோளை 1976 இல் விடுத்தன.

இந்த வேண்டுகோளில் அளப்பரிய அர்ப்பணிப்புகளுக்கூடாகவும் போராடத் தயாராய் இருக்கவேண்டும் என்று அப்போதைய தமிழ் இளைய தலைமுறையினருக்கு அழைப்பு விடப்பட்டிருந்தது. குறித்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கான தமிழ் மக்களின் மக்களாணை ஜனநாயகரீதியாக 1977 பொதுத்தேர்தலில் தந்தை செல்வா தலைமையில் வெளிப்பட்டது.

தம் உயிர்களை அர்ப்பணித்தவர்களுக்கான கூட்டு நினைவேந்தல் நாட்களான முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் மாவீரர் நாளும் ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையோடு பின்னிப் பிணைந்தவை என்பதற்கான நியாயப்பாட்டைக் காலந்தவறாமல், இனிமேலாவது பகிரங்கமாக தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் தெளிவாக முன்வைக்க இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வரவேண்டும். இந்தச் செய்தியை இவர்கள் சொல்லவேண்டியது இலங்கை அரசுக்கும் சிங்கள தேசத்துக்கும் மட்டுமல்ல, மிக முக்கியமாக சர்வதேசத் தரப்புகளுக்கே.

மாவீரர் நினைவேந்தலைத் தடுப்பதற்குத் தனது ஆறாம் சட்டத்திருத்தத்தை நேரடியாகக் காரணம் காட்டாது இலங்கை அரசு பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும், சமவாயச் சட்டத்தையுமே தற்போது காரணம் காட்டிவருவதை நாம் இங்கு கருத்தில் கொள்ளவேண்டும்.

அதாவது, பயங்கரவாதம் என்ற தனது வாதத்தை நியாயப்படுத்தும் வகையில் உலகின் பல நாடுகளில் சட்டம் சார்ந்த தடைகள் இருக்கின்ற "அரசியல் வெளியை" இலங்கை அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறது. முதற்கட்டமாக குறித்த நாடுகள், அவற்றின் தூதராலயங்கள் ஊடாகத் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களால் அணுகப்படவேண்டும்.

அதேவேளை, நினைவுத்திறம் குறித்த அகலமான பார்வையும் செயற்திட்டங்களும் வகுக்கப்படவேண்டும்.

அடுத்த மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு முன்னதாக தற்போதே ஒரு வருட கால வேலைத்திட்டம் ஒன்றை ஏற்படுத்தி அறிவுத்தளத்தில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவது அவசியம். கட்சி வேறுபாடற்ற மாவீரர் நினைவேந்தல் தொடர்பான தமிழ்த் தேசியக் கட்சிகளின் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்படுவது இதற்கான முதற்படி.

**- அமிர்தநாயகம் நிக்சன்**



## ஆம்... அவர்கள் போராடமாட்டார்கள்

நினைவு கூர்வதற்கான உரிமை எனப்படுவது ஒரு கூட்டு உரிமை. ஒரு அரசியல் உரிமை. ஒரு பண்பாட்டு உரிமை. அரசாங்கம் அதை நீதிமன்றங்களின் மூலம் தடைசெய்கிறது.

அந்தத் தடைக்கு எதிராக போராடத் திராணியற்ற அரசியல்வாதிகள் ஒன்றில் நாடாளுமன்றத்தில் அஞ்சலி செலுத்தினார்கள் அல்லது அலுவலகங்களில் அல்லது வீடுகளில் விளக்குகளை ஏற்றினார்கள்.

அதற்கும் அப்பால் அவர்களால் போராட முடியவில்லை. நினைவுகூரும் ஒரு கூட்டு உரிமைக்காகப் போராட முடியாத இந்த அரசியல்வாதிகள் ஏனைய கூட்டு உரிமைகளுக்காகவும் போராடுவார்கள் என்று எப்படி நம்புவது?

ஆம்! அவர்கள் போராட மாட்டார்கள். நாடாளு மன்றத்தில் ஆவேசமான உரைகளை நிகழ்த்துவார்கள். அதற்கும் அப்பால் வழக்குப் போடுவார்கள். தமிழ் அரசியல்வாதிகளில் கணிசமானவர்கள் வழக்கறிஞர்கள் என்பதனால் அதைத்தான் அவர்கள் செய்வார்கள்.

அவர்களுக்கு தெரிந்த ஒரேயொரு ஒழுக்கம் அதுதான்.அதற்கும் அப்பால் போராட அவர்களுக்குத் தெரியாது. முடிந்தால் யாழ். நகரப் பகுதியில் அல்லது ஏனைய மக்கள் கூடும் இடங்களில் சில மணிநேர கவனயீர்ப்பு போராட்டத்தைச் செய்வார்கள். அல்லது பாதிக்கப்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்தால் அதில் போய் முன்னுக்கு நிற்பார்கள்.

அதற்கும் அப்பால் தாங்களாக ஒரு போராட்டத்தை ஒழுங்குபடுத்தவும் அதற்குத் தலைமை தாங்கவும் தொடர்ச்சியாக அதை முன்னெடுக்கவும் அவர்களால் முடியாது என்பதைத்தான் கடந்த பத்தாண்டுகள் நிரூபித்திருக்கின்றன.

**- நிலாந்தன்**

# வெற்றிப் படிகள்



"ஒரு மனிதனின் வெற்றி என்பது ஒரு நாள் நிகழ்ச்சியல்ல. ஒரு நாள் முயற்சியும் அல்ல. அது ஒரு இடைவிடா தொடர் ஓட்டத்தின் எல்லை. அந்த எல்லையில் ஒளிரும் வெற்றியின் வெளிச்சம் தனிமனித தேவைகளுக்கு அப்பால் இச்சமூகத்துக்கு, இனத்துக்கு அது கொடுக்கின்ற ஒளி முக்கியமானது. ஈழத்தமிழ் சமூகம் இன்று இலங்கைத்தீவையும் கடந்து மூன்றாம் தலைமுறையை எட்டிவிட்டன. நிலத்திலும், புலத்திலும் அடுத்த தலை முறையின் வெற்றிக்கதைகள் புதிய நம்பிக்கைகளையும், புதுத்தெம்பையும் கொடுக்கின்றது. தேசமாக சிந்தித்து ஓர் சக்தியாக தேசத்தை கட்டியெழுப்புவதற்கான நம் பிக்கை ஒளிக்கீற்றுக்களை தருகின்றவர்களுக்கான பக்கம் இது."

**வெற்றியாளர்**
**- சசி பாலசிங்கம்**



பொதுவாக கணினி வரைகலை துறைக்கு வருபவர்கள் மென்பொருளை கற்ற பின்னர் வரைகலையை தெரிந்து கொள்வர். ஆனால் மாறாக நான் வரை கலைஞனாக இருந்து பின் கணினி வரை கலைஞனாக மாறியதால்,ஒரு கலைஞனாக எனது பார்வையை தொழில்நுட்பத்தின் உளிகொண்டு செதுக்கமுடிவது எனது தனித்து வம் என கூறுகின்றார் சசி பாலசிங்கம்.

தமிழர் தாயகத்தில் கவனத்தை பெற்று வரும் கணினி வரைகலைத்துறையில் தனித்துவமாக தன்னை அடையாளப்படுத்தி வரும் இவர், வவுனியாவின் நெடுங்கேணியில் பிறந்து வாழ்ந்து வருகின்றார்.

போர்ச்சூழல், 1996 களில் இடம் பெயர்ந்து வவுனியாவின் பல பாடசாலைகளிலும் குறு கிய காலத்திற்கு கல்வியைக்கற்று வந்தேன் எனக் கூறும் இவர்,



வீட்டில் ஐந்து சகோதரர்களில் மூத்தவன் என்ற வகையில் தந்தையின் மரணத்தின் பின் பத்தாம் தரத்துடன் தனது கல்வியை நிறுத்தி விட்டு வேலைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது என தெரி விக்கின்றார்.

சித்திரம் வரைதல் மீதான தனது ஆர்வம் சிறுபராயம் முதலே துளிர்விட்ட ஒன்றாகினும், அதற்கான ஆதரவு குடும்பத்திலும் சரி, வெளி யேயும் சரி குறைவானதாகவே காணப்பட்டதாக தெரிவிக்கும் இவர்,

தனது **சித்திரக்கொப்பியை தந்தையே கிழித்தெறிந்த சம்பவங்கள்** நிறைய நடந்தேறியுள்ளது எனக்குறிப்பிடுகின்றார்.

சித்திரங்களை கொப்பியோடு மட்டும் மூடிவைக்காமல், அயல் வீட்டார்களின் மதில்களில் "சுவர்ச்சித்திரங்களை" வரைந்து வந்த நிலைமாறி, இன்று அது ஒரு தொழில்முறை வரைகலைஞனாக இவரை உருவாக்கியிருக்கிறது.

"சுவர்ச்சித்திரங்களை வரைவதே அன்று எனது பிரதான தொழிலாக செய்து கொண்டிருந்தேன். கணினி ஒன்றை எவ்வாறு இயக்க ஆரம்பிப்பது (switch on) என்பதே எனக்கு தெரியாமல் இருந்த ஒரு காலம் அது.

எனது நெருங்கிய நண்பரான கிஷாந் ஸ்ரீ ஊடாக , ஒரு தனியார் கணினி வரை கலை நிறுவனமான streetfox இல் டிஜிட்டல் வரைகளைஞராக இணைந்து கொண்டேன். அங்கே எனது வேலையானது, ஒரு டிஜிட்டல் பேனா மற்றும் வரையும் தட்டில் (drawing pad) ஓவியங்களையும் வடிவங்களையும் வரைந்து கொடுப்பது மட்டுமே.மென் பொருள் சார்ந்த வடிவமைப்பு விடயங்களுக்கு வேறு சிலர் அதே நிறுவனத்தில் இருந்த தனால் வரைகலை மென் பொருளை கற்றுக் கொள்ளும் வாய்ப்பு அமையவில்லை.

அந்த நிறுவனத்தில் இருந்துவிலகிய சிறிது காலத்தில் மென்பொருளை கற்றுக் கொள்வதற்காக Vocational Training Authority (VTA) என்னும் இலவச தொழில் சார் கல்வி நிலையத்தில் இணைந்து வரைகலை மென்பொருள் சார்ந்த எனது அறிமுகத்தை பெற்றுக்கொண்டேன்.

அதன் பின் எனது சுய தேடலின் மூலம் சிறிதளவு ஆங்கிலத்தை கற்றுக்கொண்டது, இணைய வழியாக வரைகலை தொழில்நுட்பங்களை மேலும் தேடிக் கற்கவும் வேற்று மொழி வாடிக்கையாளர்களுடன் பணியாற்றவும் வழி வகுத்தது."

தமிழர் தாயகத்தில் விளம்பரம், கணினி வரை வடிவமைப்பு போன்றவற்றிற்கான அவதானிப்பு தற்பொழுது மெல்ல மெல்ல கவனம்பெறத்தொடங்கியுள்ளது. இருப்பினும் இத்துறைக்கான சந்தை வாய்ப்பு குறைவான தாகவே அங்கு காணப்பட்டுகின்றது. ஆனால் வெளிநாடுகளில் இருந்து கணினி வரைகலை வடிவமைப்புக்கான வாய்ப்புக்கள் தாயகம் நோக்கி கொடுக்கவும் தயாராகவுள்ளனர். கொடுத்தும் வருகின்றனர். இணையமும் சிறிதளவு தொழில்முறை ஆங்கிலமுமே தனக்கான வெளிநாட்டு வாய்ப்புக்களை தருகின்றன என இவர் குறிப்பிடுகின்றார்.




"பொதுவாக தற்பொழுது நான் வியாபார நிறுவனங்கள் மற்றும் திரைப்படங்களின் சந்தைப்படுத்தல் பதாதைகளையே அதிகம் வடிவமைத்து வருகிறேன்.

வியாபார நிறுவனங்களின் தர அடையாளங்களை (brand identity ) அதிகமாக வடிவமைத்து வருகிறேன். அதே நேரம் ஈழ சினிமாவில் வெளிவருகின்ற திரைப்படங்களுக்கான போஸ்டர் மற்றும் இதர சந்தைப்படுத்தல் வடிவமைப்புகளிலும் ஈடுபட்டு வருகிறேன்"

போரின் ஓய்வுக்கு பிந்திய இன்றைய சூழலில், "அபிவிருத்தி அரசியல்" என்ற சிறிலங்கா ஆட்சியாளர்களின் "அபிவிருத்தி" என்பது அடுத்ததலைமுறையின் திசை வழிப்பாதையை கேள்விக்குறியாக்குகின்றது என்ற கவலைகள் ஒருபுறமிருக்க, மறு புறம் தனித்துவமான அடையாளங்களுடன் **அடுத்த தலைமுறையினரில் ஒரு பகுதி, கலையை ஆயுதமாக கையில் எடுத்துள்ளனர்.**

அவ்வாறு சமீபத்தில் இயக்குனர் மதி சுதாவின் வெடிமணியமும் இடியன் துவக்கும், விரைவில் வெளிவர இருக்கிற இயக்குனர் வசந்தசீலனின் முழு நீளத்திரைப்படமான நாநீ என்பவற்றின் போஸ்டர்கள் தன்னால் வடிவமைக்கப்பட்டவையே எனக்குறிப்பிடும் சசிபாலசிங்கம், "எனது கற்பனை வளத்தினை வினைத்திறனாக பயன்படுத்தக்கூடிய வரை கலை வடிமைப்புகளில் நான் அதிக மாக வேலை செய்ய விரும்புகிறேன்." என ஆசையை வெளிப்படுத்துகின்றார்.

இவ்வரைகலைஞனின் ஆசைக்கு தீனி போட வேண்டியது படைப்பாளிகள் மட்டுமல்ல, தமிழ்ச்சமூகமும்தான்.



## நினைவோடை

# பண்டிதர் சரணாலயமும் கிட்டு பூங்காவும்



அது ஒரு காலம், நல்லூர்த் திருவிழா மூட்டம் அந்தக் கோயிலே கதியென்று 25 நாட்களும் கிடப்போம். கோயில் திருவிழா ஒரு பக்கம் என்றால் இன்னொரு பக்கம் கடலை, கச்சான், இனிப்பு, ஐஸ்கிறீம் கடைகளும், பனை, தென்னை வழியே பிறக்கும்

சுதேச உற்பத்திப் பொருட்களுமாகக் கோயிலைச் சூழவும் மூகாமிட்டிருக்கக், கோயில் முன்றலில் சங்கீதக் கச்சேரிகள், கதாப் பிரசங்களுமாகச் சாமம் தொடும் நிகழ்ச்சிகள்.

இதெல்லாம் அந்தக் கோயில் திருவிழாவுக்கான தற்காலிக ஏற்பாடுகள். ஆனால் இதையெல்லாம் தாண்டி ஒரு நிரந்தரப் பொழுது போக்கு மையமாக அப்போது அமைந்தது பண்டிதர் சரணாலயம். நல்லூர்க் கந்தசாமி கோயிலுக்குத் தட்டாதெருச் சந்தியாலோ, பலாலி வீதியாலோ பயணப்படும் போது எதிர்ப்படும் கந்தர்மடச் சந்தியின் முடக்கில் பண்டிதர் சரணாலயம் அமைந்திருந்தது.

கப்டன் பண்டிதர் என்ற இயக்கப் பெயர் கொண்ட ப.ரவீந்திரன் வல்வெட்டித்துறைக்கு அருகேயுள்ள கம்பர்மலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1977ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்தில் சேர்ந்து இயக்க வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். கடமையுணர்வு, கடும் உழைப்பு, இலட்சியப்பற்று ஆகிய சீரிய பண்புகள் நிறைந்த கப்டன் ரவீந்திரன், விடுதலைப் போராளிகளின் அன்புக்கும் மதிப்பிற்கும் பாத்திரமாக விளங்கினார். தமிழீழ விடுதலைப்புலிகளின்தலைவர்வே. பிரபாகரனுக்கு மிகவும் வேண்டியவராக, அவரது வலது கையாகத் திகழ்ந்தார். இயக்க நிர்வாகப் பொறுப்புக்களைச் சுமந்து வந்ததோடு மட்டுமல்லாது, கெரில்லாத் தாக்குதல் நடவடிக்கைகளிலும் இவர் பங்குபற்றி வந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கெரில்லா வீரர்களுக்கும் சிங்கள இராணுவத்தினருக்கும் மத்தியில் அண்மையில் நடைபெற்ற சமர் ஒன்றில், புலி இயக்கத்தின் முக்கிய தளபதிகளில் ஒருவரான கப்டன் ப.ரவீந்திரன் (பண்டிதர்) வீரமரணம் அடைந்தார். இந் நிகழ்ச்சி 1985 ஜனவரி 9ஆம் திகதியன்று, யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அச்சுவேலி எனும் கிராமத்தில் நடைபெற்றது.

அச்சுவேலியிலுள்ள விடுதலைப்புலிகளின் கெரில்லாத் தளமொன்றை, பெருந்தொகையான சிங்கள இராணுவப் படையினர் திடீரென முற்றுகையிட்டனர். இதனைத் தொடர்ந்து அத்தளத்திலிருந்த எமது விடுதலை வீரர்களுக்கும் இராணுவத்தினருக்கும் மத்தியில், பயங்கரச் சண்டை மூண்டது. நீண்ட நேரமாக நடைபெற்ற இச்சண்டையில் கப்டன் ரவீந்திரன் இறுதிவரை போராடி, விடுதலை இலட்சியத்திற்காகத் தனது உயிரைத் தியாகம் செய்தார். கப்டன் ரவீந்திரனுடன் நான்கு இளம்புலிகள் வீரமரணம் அடைந்தனர். ஏனைய போராளிகள் முற்றுகையை உடைத்துக் கொண்டு தப்பினர். (கப்டன் பண்டிதர் குறித்த தகவல் உதவி : ஈழமலர் இணையம்)

இவ்விதம் வீரமரணமடைந்த கப்டன் பண்டிதர் அவர்கள். ஞாபகார்த்தமாகவே அப்போது பண்டிதர் சரணாலயத்தை விடுதலைப் புலிகள் உருவாக்கினர்.



நல்லூர்த் திருவிழாவுக்கு இணுவிலில் இருந்து போகும் சாக்கில் தான் பண்டிதர் சரணாலத்துக்கும் முற்றுகை இடுவோம். அம்மாவுடன் போனால் கைலாசப் பிள்ளையாரடியால் பஸ்ஸில் தான் பயணிக்க வேண்டும். இதைத் தவிர்த்து அப்பாவி. சைக்கிளில் குந்தியிருந்து போனால், கோயிலில் சுவாமி தரிசனம், நல்லூர்த் தேர்முட்டி அடியில் இருந்து யோகர் சுவாமிகள் குறித்து அப்பாவின் சிந்தனைகளைப் பொறுமையாகக் கேட்டு நல்ல பிள்ளையாக நடந்து, வழி தெருவில் கச்சான் கடலைக்கும் அடம் பிடிக்காமல் பண்டிதர் சரணாலயத்துக்கு முன் வரை அமைதிய வந்து பேச்சைக் கிளப்பி விடுவேன்.


கிட்டு: தனிமனித சரித்திரம் -ஒரு காலத்தின் பதிவு!

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

“அப்பா அப்பா உள்ளுக்கை ஒருக்கால் எட்டிப் பார்த்து விட்டு வரட்டோ?”

சரி இவன் நல்ல பிள்ளைக்கு நடிக்கிறானே என்று அப்பாவும் சைக்கிளை ஓரம் கட்டி விட்டு வெளியே கூட்டத்தோடு நிற்பார். சில சமயங்களில் தானும் கூட வருவார். சிறுவருக்கு ஐம்பது சதம், பெரியவர்களுக்கு ஒரு ரூபாய் நுழைவுக் கட்டணம் என்று நினைவு.

உள்ளே கிளிகள், குருவிகள் என்று ஏகப்பட்ட பறவை இனங்கள், ஆட்டம் போடும் குரங்குகளில் இருந்து வன்னிக் காடுகளில் பிடித்த அரிய வகை உயிரினங்கள் எல்லாம் கூண்டுக்குள் நின்று வேடிக்கை காட்டும். ஒவ்வொரு கூண்டிலும் அழகு தமிழில் பெயர்கள் பொறிக்கப்பட்டிருக்கும். என் ஞாபக அறிவில் வித விதமான தாவரங்களும் அவற்றின் விஞ்ஞானப் பெயர்களோடும், தேனீ வளர்ப்பு முறைமையும் இருந்ததாகவும் நினைப்பு.

அந்தக் காலத்தில் வீடுகளில் லவ் பேர்ட்ஸ் வளர்க்கும் மோகம் முளை விட்டிருந்த காலத்தில்

இப்படி பண்டிதர் சரணாலத்த்தில் வித வி-தமான வன விலங்குகளைப் பார்த்து ரசிப்பதே அப்போது எங்களுக்கு ஆச்சரியமான அனுபவம்.

1987 ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படையாக வந்து இலங்கை அரசிடம் சோரம் போனதோடு எழுந்த போரோடு பண்டிதர் சரணலயம் காடானது. எந்த வித பராமாரிப்போ, எடுக்க ஆள் இன்றியோ புதர் மண்டிக் கிடந்தது பல காலம். அதற்குப் பின் அந்தப் பக்கமே போவதற்கு ஏனோ தோன்றியதில்லை.

கேணல் கிட்டு (சதாசிவம் கிருஸ்ணகுமார்) ஈழப் போராட்டத்தில் இணைந்து பரவலாக அறியப்பட்ட மாவீரர் என்பது உலகறிந்தது. அப்போது நான் உயர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். எங்கள் ரியூசன் சென்றருக்குப் போன தினம் கேணல் கிட்டுவின் வீரமரணச் செய்தி கிட்டுகிறது. சின்னக் கரும்பலகை ஒன்றை எங்கள் CCA கல்வி நிலையத்தில் இருந்து எடுத்து வந்து நண்பர்களோடு சேர்ந்து சோகக்கட்டியால்

“கிட்டு அம்மானுக்குக் கண்ணீர் அஞ்சலிகள்” என்று எழுதியது இன்னும் பசுமையாக் இருக்கின்றது.

அந்த வார இறுதி எல்லாக் கல்விச் சாலைகளும் மூடப்பட்டுத் துக்கம் அனுஷ்டிக்கிறார்கள்.

சில காலத்துக்குப் பின்னர் நல்லூர் முத்திரைச் சந்தியடியில் தேவாலய வளவுக்கு முகப்பில் எழும்புகின்றது “கேணல் கிட்டு பூங்கா”.

குகைப் பயணம், சறுக்கல், ஊஞ்சல் என்று சிறுவர்ககளுக்கான எல்லா வித மான வித விதமான களியாட்டு வித்தைகள், விளையாட்டுகள் காட்டும் உபகரணங்கள் என்று நேர்த்தியாக அமைக்கப்பட்ட பூங்கா இது. நல்லூர்க் கோயிலில் இருந்து பொடி நடையாக வந்து சேரலாம். அப்போது வளர்ந்தவர்கள் நாம் சிறுவர்களின் விளையாட்டை வேடிக்கை பார்த்து, சீமெந்துப்



புட்டிகளில் ஏறி நடந்து விட்டு வருவோம். 95 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தின் யாழ்ப்பாண முற்றுகையோடு கிட்டு பூங்காவும் வேரோடு பிடுங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்து மக்களுக்கு குறிப்பாக வடமராட்சி தவிர்ந்த பிரதேசங்களில் முக்கிய பொழுதுபோக்கு மையங்களாக இருந்த சுப்பிரமணியம் பூங்கா எண்பதுகளின் முற்பகுதியோடு கோட்டையில் மையம் கொண்ட இராணுவ அச்சுறுத்தலால் கை விட்ட சூழலில், காரைநகர்ப் பக்கம் இருந்த கசூரினாக் கடற்கரை, கீரிமலைக் கடற்கரை போன்றவை கடற்படை அச்சுறுத்தல் போன்றவற்றால் முடக்கப்பட்டிருந்த தமிழரது பொழுது போக்க்கு வாழ்வியலில் நல்லூர்த் திருவிழாவும் பண்டிதர் சரணாலயமும், கிட்டு பூங்காவும் அழிக்க முடியாத வரலாற்றுச் சுவடுகள்.

இன்று தமிழரது பூர்வீக நிலங்கள் அழிக்கப்பட்டுச் சிங்களப் பெயர் மாற்றும் சூழலில் நம் கண்ணுக்கு முன்னே எழுப்பப்பட்ட இருந்த தமிழரது அடையாளங்களைத் தாங்குவது நம் நினைவுகள் மட்டுமே.

நினைவுகளுடன் :

**கானா பிரபா** (ஒஸ்றேலியா)



தமிழ்நாடு



# எழுவர் விடுதலையைக் கையில் எடுக்க வேண்டும் தமிழக அரசு

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட எழுவரை விடுதலை செய்வதற்கான சாத்தியப்பாடு 2014-ல் தோன்றியது. அந்த வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்த மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தது அப்போதைய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சதாசிவம் தலைமையிலான அமர்வு. 18.2.2014 அன்று வழங்கிய தீர்ப்பில், அரசமைப்புச் சட்டக் கூறு 161, குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவுகள் 432, 433 ஆகியவற்றின் கீழ் மாநில அரசாங்கத்துக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி மேற்சொன்ன மூவரை விடுதலை செய்வதைத் தமிழக அரசாங்கம் பரிசீலிக்கலாம் என்னும் ஆலோசனையையும் வழங்கியது.

அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன், இந்தியக் குடியரசுத் தலைவரும் மாநில ஆளுநரும் முறையே ஒன்றிய, மாநில அரசாங்கங்களின் அறிவுரையின்படியே செயல்பட வேண்டும், அந்த அறிவுரை அவர்களைக் கட்டுப்படுத்தும் என்று மாதுராம் (1981), கேஹர் சிங் (1989) வழக்குகளில் உறுதிபட, தெளிவாகத் தீர்ப்பு வழங்கியிருக்கிறது உச்ச நீதிமன்றம்.

ஜெயலலிதா சொன்னது என்ன?

குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 433-ன் கீழ் இந்த மூவரோடு சேர்த்து, உச்ச நீதிமன்றத்தால் ஆயுள் தண்டனை வழங்கப்பெற்ற மூவர், மு.கருணாநிதி அரசாங்கத்தால் கருணை வழங்கப்பட்ட நளினி ஆகியோரையும் சேர்த்து விடுதலை செய்யும் முடிவைத் தனது அமைச்சரவை எடுத்திருப்பதாக 19.02.2014 அன்று அன்றைய முதல்வர் ஜெயலலிதா சட்டமன்றத்தில் அறிவித்தார்.

இந்த முடிவை ஒன்றிய அரசாங்கத்துக்கு அனுப்புவதாகவும், மூன்று நாட்களுக்குள் ஒன்றிய அரசாங்கம் பதில் அனுப்பாவிட்டால் தனது அரசாங்கம் அவர்களை விடுதலை செய்துவிடும் என்றும் கூறினார். அதாவது, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்ட அன்றே அமைச்சரவை கூடி அந்த முடிவை எடுத்தது. எழுவரை விடுதலை செய்வதைத் தமிழக அரசாங்கம் பரிசீலிக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் கூறியதேயன்றி, அவர்களை விடுதலை செய்வதற்கான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியதில்லை என்று கூறவில்லை.

குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 433-ன் படி செயல்பட வேண்டுமானால் அதற்கான சில நிர்வாக நடைமுறைகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு முழுவதையும் படித்துப் பார்த்திருக்க வேண்டும். இரண்டாவதாக, நீண்ட கால சிறைவாசம் அனுபவித்துள்ள கைதிகளின் நன்னடத்தை முதலியவற்றைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட மாவட்டத்திலுள்ள ஆலோசனைவாரியத்திடம்கருத்துக்கேட்டறிய வேண்டும். அப்போது மன்மோகன் சிங்கின் தலைமையில் ஆட்சியில் இருந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்துக்குச் சிக்கலை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் ஜெயலலிதாவின் அறிவிப்பு அமைந்திருந்தது. மன்மோகன் சிங் அரசாங்கமும் தன் பங்குக்கு உச்ச நீதிமன்றத்தை அணுகி எழுவரை உடனடியாக விடுதலை செய்வதற்கு இடைக்காலத் தடை விதிக்கும்படி செய்துவிட்டது. 'தடா' சட்டப் பிரிவுகளின் கீழும், கொலைக் குற்றத்துக்கான இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகளின் கீழும் இந்த எழுவருக்கும் 'தடா' சிறப்பு நீதிமன்றம் தண்டனை வழங்கியிருந்தது. அவர்களது மேல் முறையீட்டை விசாரித்த உச்ச நீதிமன்றம், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீதிருந்த பயங்கரவாத, சீர்குலைவுக் குற்றங்கள் நிரூபிக்கப்படவில்லை என்று கூறி, கொலைக் குற்றத்துக்கான இந்தியத் தண்டனைச் சட்டங்களின் கீழ் மட்டுமே அவர்களுக்குத் தண்டனை விதித்தது.



## இன்றைய நிலவரம்

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பெரும் சதித் திட்டம் இருக்கிறதா என்பதைப் புலனாய்வு செய்ய காங்கிரஸ் தலைமையில் இருந்த ஒன்றிய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட பல்முனைக் கண்காணிப்பு முகமையின் அறிக்கைக்காகக் காத்திருப்பதாக பாஜக தலைமையிலான ஒன்றிய அரசாங்கமும் கூறி வந்தது. பேரறிவாளன் தொடுத்த வழக்கொன்று 4.11.2020 அன்று உச்ச நீதிமன்றத்தின் விசாரணைக்கு வந்தது. அப்போது மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வின் தலைமைப் பொறுப்பேற்றிருந்த நீதிபதி எல்.நாகேஸ்வர ராவ், ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்னால் இருந்த சதி பற்றிய புலனாய்வு ஏற்கெனவே தண்டிக்கப்பட்டவர்களுக்குப் பொருந்தாது என்றார். அதோடு 20 ஆண்டுகளாகியும் முடிக்கப்படாத புலனாய்வு, எழுவரை விடுதலை செய்வது தொடர்பாக தமிழ்நாடு ஆளுநர் மேற்கொள்ள வேண்டிய முடிவுக்குத் தடையாக இருக்க வேண்டியதில்லை என்றும் கூறியுள்ளார்.

மேலும், எழுவரை விடுதலை செய்ய ஒப்புதல் தரும்படி தமிழ்நாடு அரசாங்கம் அனுப்பியுள்ள பரிந்துரை ஆளுநரின் பரிசீலனையில் இருப்பதால், உச்ச நீதிமன்றம் இந்த விஷயத்தில் தலையிடத் தயங்குவதாகவும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

எப்படியிருப்பினும் பல்நோக்குப் புலனாய்வு முகமையைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கும் ஒன்றிய அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஆதாரமாகக் கொண்டு, ஆளுநர் எழுவரை விடுதலை செய்வதைக் காலவரையறையின்றித் தள்ளிப்போட்டுக்கொண்டிருப்பது நியாயமல்ல. தமிழ்நாடு அரசாங்கம் அமைச்சரவையைக் கூட்டி உச்ச நீதிமன்றம் கூறிய கருத்தின் அடிப்படையில் இன்னொரு பரிந்துரையையும் வேண்டுகோளையும் ஆளுநருக்கு அனுப்பி, எழுவரின் விடுதலையை உடனடியாகச் சாத்தியப்படுத்தும் மனிதநேயச் செயல்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.

**எஸ்.வி.ராஜதுரை,**
**மார்க்ஸிய - பெரியாரிய அறிஞர்,**



நீதித்துறை நியமங்களின்படி எந்தவொரு வழக்கின் போதும் இறுதியில் நீதி நிலைநாட்டப்பட்டிருக்கிறது என்பதனை மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் வழக்கின் நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும். நீதித்துறையானது அரசியல்மயப்படுவதைத் தவிர்ப்பது ஜனநாயக ஆட்சி முறையில் மிகவும் அடிப்படையான தார்மீக நெறிமுறையாகும். ஆனால் ராஜீவ் காந்தி கொலை வழக்கின் விசாரணைகள் நடைபெற்ற பொறிமுறையும் தீர்ப்புகள் வழங்கப்பட்ட நடைமுறையும் மிகுந்த அரசியல்சுமையொன்றினை சுமந்தவாறே நடந்து முடிந்திருக்கின்றன என்பதனை எவரும் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். இது இந்திய ஜனநாயக விழுமியங்களுக்குப் பெருமை தரும் விடயமல்ல என்பதனை புரிந்து கொள்வதும் கடினமானதொன்றல்ல. இவ் விடத்தில் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு ஒரு வேண்டுகோளை நாம் முன்வைக்க விரும்புகிறோம். 2009ல் சிறிலங்கா அரசாங்கம் முள்ளிவாய்க்காலில் மேற்கொண்ட தமிழின அழிப்பினை இந்திய அரசாங்கம் ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பழிவாங்கும் முகமாக மௌனமாகவிருந்து அங்கீகரித்ததாக நமது மக்கள் பலர் கருதுகிறார்கள்.

அரசியல் நாகரீகம் கருதியும் நட்புறவு சார்ந்த அக்கறை கருதியும் நாம் பல விடயங்களைப் பகிரங்கமாகப் பேசாது விடினும் உண்மையில் நடந்த விடயங்களை வரலாற்றின் கண்களில் இருந்து நாம் மறைக்க முடியாது. வன்னியில் இறுதிப்போர் நடந்த காலங்களில் இந்திய மத்திய அரசாங்கத்தினதும் அப்போதைய தமிழ்நாடு மாநில அரசாங்கத்தினதும் நிலைப்பாடும் செயற்பாடுகளும் நமது மக்களின் மனங்களில் மிகுந்த வேதனையினை ஏற்படுத்தியிருந்தன. இப்போதும் நம்மவர் பலரது மனங்களில் ஆறாத இரணமாக இவை இருப்பது தான் உண்மை. தமிழர்கள் மனங்களில், ஈழத் தமிழர்கள் மட்டுமன்றி தமிழகம் மற்றும் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் மனங்களில், ஏற்பட்டிருக்கும் இந்த இரணத்தினை ஆற்றும் பொறுப்பும் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு இருக்கிறது. "

- மார்ச் 2014 அறிக்கையில் **பிரதமர் வி.உருத்திரகுமாரன்** நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

## செய்திகள்

# போர்குற்றவாளியை ஐ.நா அழைத்தது ஏன் ? மனித உரிமைகள் கண்காணிப்பகம் கேள்வி !

ஐ.நாவின் 75வது வருடப் பூர்த்தியை முன்னிட்டு சிறிலங்காவிலுள்ள ஐ.நா அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வொன்றில், சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்சை பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டமையானது, போர்க்குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு வெள்ளையடிக்கும் செயலென மனித உரிமைகள் கண்காணிப்பகம் சாடியுள்ளது. போர்க்குற்றங்கள், மனித உரிமைகள் மீறல்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் முகத்திலறையும் இவ்வாறான செயல்களில் ஐக்கிய நாடுகள் சபை ஈடுபடக்கூடாது எனவும் ஐ.நாவுக்கான மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பணிப்பாளர்லூயிஸ் சார்போனே சுட்டிக்காட்டியுள்ளார்.


HUMAN RIGHTS WATCH

Countries | Topics | Video & Photos | Impact | Take Action | About | Join Us | Give Now

October 30, 2020 11:15AM EDT | Dispatches

Suspected Architect of Sri Lanka War Crimes is UN's 'Chief Guest'

UN Shouldn't Help Repressive Government Launder Image

Louis Charbonneau
United Nations Director
@loucharbon

# அமெரிக்க கொங்கிரஸ் சபையில் சிறிலங்கா தொடர்பில் தீர்மானம் !

உலகெங்கிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் அமெரிக்க கொங்கிரஸ் சபையில் கொங்கிரஸ் சபை பிரதிநிதிகளான பிராட் ஷெர்மன் மற்றும் ஜேமி ரஸ்கின் ஆகியோரால் சமர்பிக்கப்பட்ட தீர்மானத்தில் சிறிலங்காவில் வலிந்து கட்டாயமாக காணாமல் போனவர்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களை விரைவாக நீதிக்கு கொண்டுவருவதற்கான நோக்கத்துடன் பயனுள்ள மற்றும் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ளுங்கள் என கோரப்பட்டுள்ளது.

இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் 1300 நாட்களுக்கு மேலான போராட்டத்தினை சுட்டிக்காட்டியுள்ள இத்தீர்மானம், போராட்டத்தில் ஈடுபடுகின்றவர்கள் மீதான அச்சுறுத்தல், இராணுவ துன்புறுத்தல் தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளது.

இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள், போர்குற்றங்களுக்கு பொறுப்புக் கூற வேண்டிய உயர்மட்ட இராணுவ அதிகாரிகளை சிறிலங்கா அரசாங்கம் பதவி உயர்த்தியுள்ளதோடு, சம்பந்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை சிறிலங்கா அரசாங்கம் தட்டிக்களித்துவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச உடன்படிக்கையில் அமெரிக்கா கையெழுத்திட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.



# சிறிலங்காவுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் செய்தி என்ன ?




வர்த்தகம் என்பது ஒரு வழித்தடம் அல்ல. தற்போது இலங்கையில் காணப்படும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக இலங்கை மற்றும் ஐரோப்பிய வியாபாரங்களில் எதிர் மறைத்தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதுடன், வெளிநாட்டு நேரடி முதலீட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக, பிராந்தியத்தின் மையமாகத் திகழும் இலங்கையின் முயற்சிகளுக்குப் பெரும் தடையேற்பட்டுள்ளது. ஏற்றுமதிக்கு அவசியமான மூலப்பொருட்கள் மற்றும் இயந்திர சாதனங்களின் இறக்குமதியைப் பாதிப்பதனூடாக ஏற்றுமதியிலும் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. உலக வர்த்தக நிறுவனத்தின் ஒழுங்குவிதிமுறைகளுக்கு அமைவாக நீண்டகால இறக்குமதித்தடை காணப்படவில்லை என்பதையும் சிறிலங்காவுக்கு நினைவூட்டுகின்றோம் என ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள், ஊழியர், சூழல், காலநிலை மாற்றம் மற்றும் நல்லாட்சி ஆகியன உள்ளடங்கலாக 27 சர்வதேச மாநாடுகளின் தீர்மானங்களை நிறைவேற்றுவதன் பொருட்டு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை மூலமாக ஐரோப்பிய சந்தையில் இலங்கை பெருவாரியான வாய்ப்புக்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறது என சுட்டிக்காட்டியுள்ள ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்திலிருந்து சிறிலங்கா வெளியேறிமை முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும் எனவும் தெரிவித்துள்ளது.

# இலங்கையில் மனித உரிமை சூழல் மோசமடைந்ததுள்ளது : இது பிரித்தானியாவின் அறிக்கை !




மனித உரிமைகள், ஜனநாயகம் ஆகியவற்றுக்கான வெளிவிவகார, பொதுநலவாய ஆண்டு பிரித்தானியாவின் அறிக்கையில் இலங்கையில் மனித உரிமை சூழல் மோசமடைந்ததுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலக அளவில் மனித உரிமைகள் தொடப்பில் கவனம் செலுத்த வேண்டிய 30 நாடுகளின் பட்டியலில் சீரழிந்த பகுதிகள் என்ற நாடுகளின் பட்டியலில் சிறிலங்கா இணைக்கப்பட்டுள்ளது.

செயற்பாட்டாளர்கள், மனித உரிமை பாதுகாவலர்களின் கண்காணிப்பு மற்றும் மிரட்டல், மனித உரிமை வழக்கறிஞர்கள் குற்றச்சாட்டு இன்றி தடுத்துவைக்கப்படுதல், போர் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கியமை ஆகியவற்றுடன் இலங்கையில் மனித உரிமை சூழல் மோசமடைந்ததுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களுக்கான தனது ஆதரவை வாபஸ் பெற்ற சிறிலங்கா, நல்லிணக்கம், பொறுப்புக்கூறலுக்கான உள்நாட்டு பொறிமுறைக்கான உறுதிப்பாட்டை அறிவித்தபோதும் இது இன்னும் நிறுவப்படவில்லை எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் பகுதிகளில் பொது மக்களின் பொதுச் செயற்பாடுகளில் சிறிலங்கா இராணுவத்தினது தலையீடுகள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதோடு,பொது நிர்வாக நியமனங்களில் இராணுவத்தினரை நியமித்தல் உள்ளடங்க போர்க் குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரடோனா: ஆடுகளத்துக்கு அப்பால் ஆடிய களம் !






கால்பந்து உலகின் ஆட்ட நாயகனை விளையாட்டுலகம் இழந்துவிட்டது. லத்தீன் அமெரிக்க நாடான ஆர்ஜென்டீனாவின் தேசிய அடையாளமாக திகழும் மரடோனா, ஆடுகளத்தையும் தாண்டி ஒடுக்கப்பட்ட மக்களின் நீதிக்கான குரலாக ஒலித்த ஆட்ட நாயகன்.

தனது 16வது வயதில் தொழில்முறை கால்பந்தாட்ட வீரராக அறிமுகமான மரடோனா, கால்பாந்தாட்ட உலகில் தனக்கென தனி முத்திரை பதித்து, உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்களைப் பெற்றிருந்தார்.

தனது அபாரமான ஆட்டத்தின் ஊடாக தனது தாய் மண்ணுக்கு உலக கால்பந்து கோப்பையினை பெற்றுக் கொடுத்து, விளையாட்டுலகில் தனது தேசத்துக்கு தனித்த அடையாளத்தை பெற்றுக் கொடுத்த இவர், கால்பாந்தாட்ட உலகில் இருந்து ஓய்வு பெற்ற பிறகும் தமது தாயக அணியின் சிறப்பு பயிற்சியாளராக இருந்துள்ளார்.

அவரது இழப்பு அவரு தாய் மண்ணையும் கடந்து ஒடுக்கப்பட்ட மக்களின் மனங்களில் ஆறாப்பெருந்துயரை ஏற்படுத்தியிருக்கின்றது என்று சொன்னால் அவர், ஆடுகளத்தையும் தாண்டி தனது அடையாளத்தை ஒடுக்கப்பட்ட மக்களுக்கான குரலாக பாவித்தவர். நேசித்தவர். அதனால்தான் அவர் கொண்டாப்படுகின்றார்.

அரச அதிகார வர்க்கங்களின் பின்னால் ஒளிந்து நின்று சுகபோகங்களை அனுபவிக்காது, எங்கெல்லாம் ஒடுக்குமுறை நிலவியதோ மக்கள் ஒடுக்கப்பட்டார்களோ, அந்த ஒடுக்கப்பட்ட மக்களுடன் அவர் நின்றார். உதாரணமாக, பலஸ்தீன போராட்ட அமைப்புகளுடன் நெருக்கமாவிருந்தார். தன்னாலான பொருளாதர உதவிகளையும். தனது பிரபலத்தை பலன்படுத்தி, பிரச்சாரங்களையும் போராட்ட அமைப்புகளுக்காக செய்தார்.

அமெரிக்கா ஏகாதிபதிபத்தியத்துக்கு எதிராக செயற்பட்ட கியூபா, வெனிசுவெலா, நிக்கரகுவா, உருகுவே, கடாபியின் லிபியா போன்ற நாடுகளுடனும் நெருக்கமாக இருந்தார். அமெரிக்க பொருளாதார தடைகளுக்கு எதிராக குரல் கொடுத்தார்.

காஸ்ட்ரோவின் உருவப் படத்தை தனது இடது காலிலுமசே குவேராவின் உருவத்தை, தனது வலது கையிலும் பச்சை குத்தியவர் மரடோனா.



ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களை ஆதரித்த மரடோனா ஏகாதிபத்திய அடையாளங்களுக்கு தனது எதிர்ப்பை வெளியிட்டு வந்தார்.


குறிப்பாக 2005ம் ஆண்டு அர்ஜென்டினாவின் இடம்பெற்ற உச்சி மாநாட்டில் அப்போதைய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கலந்துகொண்டதை எதிர்த்தார், “ஸ்ரொப் புஷ்” (“STOP BUSH”) எனப் பெயரிடப்பட்ட ரீ- ஷேர்ட்டை அணிந்திருந்ததுடன் புஷ்ஷை “மனித குப்பை” (“human garbage) எனக் குறிப்பிட்டார். 2007ல் ஓகஸ்ட் இல், தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் “அமெரிக்காவிலிருந்து வரும் அனைத்தையும் நான் வெறுக்கிறேன், என் முழு பலத்தினாலும் அதை நான் வெறுக்கிறேன்” என்று கூறினார்.

தனது நகரத்தின் ஏழ்மையான மக்களின் குடிசை வாழ்வோடு இணைந்திருந்த மரடோனா அங்கிருந்து தனக்கான ஆளுமையையும் வளர்த்தார்.

டிசம்பர் 2007ல், மரடோனா ஈரான் மக்களுக்கு ஆதரவான செய்தியுடன் கையொப்பமிடப்பட்ட ரீ ஷேர்ட் ஒன்றை வழங்கினார்.

இவ்வாறு விளையாட்டினால் தனக்கு கிடைத்த உலக அங்கீகாரத்தினை ஒடுக்கப்பட்ட மக்களுக்கான ஆயுதமாக மாற்றி ஆடுகளங்களுக்கு அப்பாலும் களமாடியவர் மரடோனா.

# மீண்டும் வெளிப்பட்ட சிங்களத்தின் “இனநாயக” முகம் !



சிறிலங்கா அரசியற் கட்டமைப்பு சிங்களப் பௌத்த பேரினவாதக் கட்டமைப்பாக இறுகிப் போயிருக்கும் நிலையில் “இனநாயக” கட்டமைப்பின் கீழ், தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் எத்தகைய தீர்வையும் கண்டுவிட முடியாது என்பதனை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தொடர்சியாக கூறி வரும் நிலையில், இந்த இனநாயக கட்டமைப்பினை மேலும் இறுக்கமான சிங்கள பௌத்த நிறுவனமாக வளர்த்தெடுப்பதை நோக்காக சிறிலங்காவின் ஆட்சியாளர் கோத்தாபய ராஜபக்சவின் சமீபத்திய உரை வெளிப்படுத்தியுள்ளது.

சிறிலங்காவின் தேசிய தொலைக்காட்சியின் ஊடாக அவர் ஆற்றிய உரையின் முக்கிய “இனநாயக” பகுதிகள் பின்வருமாறு :

“இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்பு இந்த நாட்டின் 69 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் என்னை உங்கள் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுத்தனர். அன்று எனக்கு பெரும்பான்மையான சிங்கள மக்கள் வாக்களித்தனர் என்பது உண்மை. பிரிவினைவாதம், தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தை ஆதரிக்கும் பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகள் மற்றும் சித்தாந்தங்களுக்கு முகங்கொடுத்து சிங்கள இனம், எமது மதம், தேசிய வளங்கள் மற்றும் பாரம்பரிய மரபுரிமைகள் அழிவுறும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றது என்ற நியாயமான அச்சம் இருந்ததால் அவர்கள் அணிதிரண்டனர்.”

“இந்த நாட்டின் உச்ச அரசியலமைப்பின் படி நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பேன் என்றும், பௌத்த சாசனத்தை பாதுகாத்து போசிப்பேன் என்றும் அன்று ருவன்வெலிசேய புன்னிய பூமியில் வழங்கிய உறுதிமொழியின் பிரகாரம் நான் எப்போதும் செயற்பட்டு வந்துள்ளேன்.”

“ஒவ்வொரு மாதமும் நான் மூன்று நிகாயக்களினதும் முன்னணி பௌத்த பிக்குகள் உள்ளடங்கிய ஆலோசனை சபையை சந்தித்து ஆட்சி குறித்த அவர்களின் ஆலோசனையைப் பெறும் நடைமுறையொன்றையும் நான் பின்பற்றி வருகின்றேன்.”

“தொல்பொருள் பெறுமதிவாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்கும் எமது பௌத்த மற்றும் தேசிய மரபுரிமைகளை பாதுகாப்பதற்கும் நான் இப்போது ஒரு விசேட செயலணியை அமைத்துள்ளேன்.

“இதுவரை செய்த அனைத்துமே ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் இந்த நாட்டின் பெரும்பான் மையான மக்களால் அங்கீகரிக்கப்பட்ட, மக்களினால் மக்களுக்காக தயாரிக்கப்பட்ட ‘சுபீட்சத்தின் நோக்கு’ கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரமாகவே ஆகும்.”

# ஆக்கிரமிப்பு படையினருக்கு

## *355 பில்லியனை ஒதுக்கிய சிறிலங்கா*

தமிழர் தேசத்தை ஆக்கிரமித்து மண்ணில் தனது பாதுகாப்பு படைகளை நிலைநிறுத்தியுள்ள சிறிலங்கா, அதன் தேவைகளுக்காக 355 பில்லியன் ரூபாய்களை ஒதுக்கியுள்ளது. 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் போது சிறிலங்காவின் பிரதமராகவும், நிதி அமைச்சராகவும் இருக்கின்ற போர்குற்றவாளியான மஹிந்த ராஜபக்ஸ, பாதுகாப்பு அமைச்சுக்கென 355 பில்லியன் ரூபாய்களை ஒதுக்கியுள்ளார்.

2019 ஆம் ஆண்டு 306 பில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்த சிறிலங்கா, தற்போது 2021 ஆம் ஆண்டுக்கு 49 பில்லியன் ரூபாவைக்கூட்டி 355 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

# கெரோனாவைவிடப் பெரிய அச்சுறுத்தல் பருவநிலை மாற்றம்



கெரோனாவைவிடப் பெரிய அச்சுறுத்தல் பருவநிலை மாற்றம் என எச்சரித்துள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இதற்குத் தடுப்பூசிகள் கிடையாது எனத் தெரிவித்துள்ளது.

1960களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பேரிடர்களைச் உலகம் சந்தித்துவிட்டது. தொடர்ச்சியான வானிலை மற்றும் பருவநிலை தொடர்பான பேரிடர்கள் சமீபகாலங்களில் கணிசமாக அதிகரித்துள்ளன. 2019-ல் மட்டும் உலகத்தில் 308 இயற்கையான பேரிடர்கள் ஏற்பட்டுள்ளன. இதில் 77 சதவீதம் வானிலை அல்லது பருவநிலை சம்பந்தப்பட்டவை.

இந்த நிலை தற்போது 35 சதவீதம் அதிகரித்துள்ளது. கோவிட்-19 வைரசுக்கு தடுப்பூசி வந்த பிறகு கெரோனாவைக் கட்டுப்படுத்த முடியும். ஆனால், பருவநிலை மாற்றம் அப்படிப்பட்டது அல்ல. துரதிர்ஷ்டவசமாக இதற்குத் தடுப்பூசி இல்லை எனத் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

# கொரோனா செய்திகளை வெளியிட்ட பத்திரிகையாளருக்கு சிறை



சீனாவில் வூஹான் நகரில், அரசு விதிக்கு மாறாக கெரோனா வைரஸ் குறித்துச் செய்திகளை வெளியிட்ட பெண் பத்திரிகையாளர் ஒருவருக்கு ஐந்து வருட சிறை தண்டனையை சீனா விதித்துள்ளது.

கடந்த மே மாதம் கைது செய்யப்பட்ட இவர், சர்ச்சையைத் துாண்டும் வகையில், அரசு விதிகளுக்கு மாறாகச்செய்திகளை வெளியிட்டதற்காக அவர் கைது செய்யப்பட்டதாக சீனா அரச தரப்பில் தெரிவித்துள்ளது.


# அமெரிக்க அதிபர் ட்ரம்பின் கடைசிக்குண்டு



அதிபர் தேர்தலில் தோல்வியுற்ற நிலையிலும் ஈரானின் அணு உலைகள் மீது தாக்குவதற்கு அமெரிக்க அதிபர் (?) ட்ரம்ப், திட்டமிட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தனது இவ்விருப்பத்தை அமெரிக்க அதிபர் ட்ரம்ப், உயர்நிலை அதிகாரிகளிடம் கூறிய போது அதிகாரிகள் அதற்கான சாதக, பாதகங்களை ட்ரம்ப்பிடம் எடுத்துரைத்தனைந் தொடர்ந்து தனது விருப்பத்தில் இருந்து பின்வாங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் 10 லட்சம் குழந்தைகள் கெரோனாவால் பாதிப்பு



அமெரிக்காவில் கெரோனா வைரஸ் தொற்று ஆரம்பித்ததிலிருந்து இதுவரை சுமார் 10,39,464 குழந்தைகள் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நொவெம்பர் மாத முதல்வாரத்தில் மட்டும் 1 லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் கெரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அமெரிக்காவில் இதுவரை ஒரு கோடிக்கும் அதிகமானவர்கள் கெரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 2 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.




# கொரோனா போர்களத்தின் தடுப்பு மருந்துக்கான யுத்த முனைகள் !

“நாம் கண்ணுக்கு தெரியாத எதிரியுடன் போராடத் தொடங்கியுள்ளோம்” என உலகத் தலைவர்கள் அனைவரும் கொரோனா வைரஸ் பெருந்தொற்றுக்கு எதிரான தமது போர்ப்பிரகனடத்தை செய்திருந்தனர் என்பது பழைய கதை. தற்போது இப்போர்களத்தில் பல முனைகளில் இருந்து தடுப்பூசிக்கான யுத்தம் தொடங்கியுள்ளது.

இந்த யுத்தகளமே இன்று உலக பங்குச்சந்தையின் ஏற்ற இறக்கத்தை தீர்மானிக்கும் சக்தியாக மாறியுள்ளது.

கடந்த ஏழு மாதங்களுக்கு மேலாக கெரோனாவை மையப்படுத்தி தடுப்பு மருந்தை உருவாக்கும் பணிகளில் உலக மருத்துவ நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு ஈடுபட்டு வருகின்றன. உருவாக்கப்படும் மருந்துகள் பலகட்டப் பரிசோதனைகளுக்கு அனுப்பப்படும்போது எதிர்பாராத பலனை அளிக்காமல் போவதும், அதிக பக்கவிளைவுகளை ஏற்படுத்துவதுமாகவே இருந்தன.

உலகளவில் தற்போது ஆரம்ப மருத்துவ பரிசோதனை அல்லது மருத்துவ பரிசோதனைகளில் 175 க்கும் மேற்பட்ட தடுப்பூசி விண்ணப்பதாரர்கள் காணப்படுகின்றனர். இவைகளில் 34 பேர் மருத்துவ பரிசோதனைகளில் உள்ளன. இதில் 8 தடுப்பூசிகள் 3வது கட்ட மனித சோதனைகளில் இறுதி கட்டத்தில் உள்ளன.

சமீபத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த பைசர் நிறுவனம், ஜெர்மனியைச் சேர்ந்த பையோ எண்டெக் நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கியுள்ள தடுப்பு மருந்து மூன்றாம் கட்டப் பரிசோதனையில் 95வீதம் பலனை அளித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 300 மில்லின் தடுப்பூசிக்கான ஒப்பந்தத்தை ஐரோப்பா இந்நிறுவனங்களுடன் போட்டுள்ளது.

முன்னராக ரஷ்யா உருவாக்கிய ஸ்புட்னிக்-5 என்ற தடுப்பு மருந்து 92 சத வீத பலனையும், சீனா உருவாக்கிய தடுப்பு மருந்துகளும் நல்ல பலனை தந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இருந்த போதும் மேற்குலக நாடுகளின் ரஸ்ய, சீனா (எதிர்ப்பு மனநிலை) அந்நாடுகள் உருவாக்கிய தடுப்பு மருந்துகள் நோக்கிச் செல்லவில்லை.



ஆனால் சீனாவும், ரஸ்யாவும் தனது நேசநாடுகளுக்கு அதனை வாரிவழங்கி வருகின்றது.

அதாவது கொரோனா தடுப்பு மருந்து என்பது உலக மருத்துவ நிறுவனங் களிடையே யுத்த களத்தை திறந்துள்ளது. தாம் உருவாக்கிய ஆயுதங்களை பரிசோதனை செய்வதற்கான வல்லரசு நாடுகள் போர்களங்களை தமது நாடுகளுக்கு வெளியே திறப்பதுபோல், தாம் உருவாக்கியுள்ள கொரோனா தடுப்பு மருந்துகளை பரிசோதனை செய்வதற்கான களங்களை உலக மருத்துவ நிறுவனங்கள் தொடங்கியுள்ளன என்ற கவலைகள், சந்தேகங்கள் காணப்படுகின்றன.

தடுப்பூசியை விரைவாகக் கண்டுபிடிப்பதற்கு சாதாரண ஒழுங்குமுறை செயல் உருவாக்கப்படுகிறது என்ற கவலைகளுக்கு மத்தியில், 9 முன்னணி மருந்து நிறுவனங்கள் கொரோனா வைரஸ் தடுப்பூசியை உருவாக்கி உற்பத்தி செய்வதில் உயர் அறிவியல் மற்றும் நெறிமுறை தரங்களை கடைபிடிப்பதாக உறுதியளித்தன.

தடுப்பூசி போடப்பட்ட நபர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை எப்போதும் தங்களின் முதன்மை முன்னுரிமையாக மாற்றுவோம் என்று அவர்கள் உறுதியளிப்பதாக தெரிவித்துள்ளனர். மேலும், அவர்கள் 3வது கட்ட மருத்துவ ஆய்வின் மூலம் பாதுகாப்பு மற்றும் செயல்திறனை நிரூபித்த பிறகு, தடுப்பூசிகளுக்கு ஒப்புதலை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.


கொரோனா வைரஸ் தடுப்பூசி தங்கள் நாட்டு பொதுமக்களுக்கு முதலில் கிடைக்க வேண்டும் என்று உலக நாடுகளின் போட்டிகளுக்கு நடுவே ,தடுப்பூசிகளை உருவாக்குவதற்கு பின்பற்றப்படும் விஞ்ஞான செயல்முறையின் நம்பகத்தன்மையை கடுமையாக குறைமதிப்பிற்கு உட்படுத்திய மருத்துவ நிறுவனங்களின் அறிக்கை வந்துள்ளது.

நிறுவனங்கள் தங்கள் தடுப்பூசிகளுக்குஅவசரகால பயன்பாட்டு அங்கீகாரம் கோருவதை நிராகரிக்கவில்லை.ஆனால், அதுவும் 3வது கட்ட சோதனைகளுக்குப் பிறகுதான் நடக்கும். 3 கட்ட சோதனைகள் நிறைவடைவதற்கு முன்பே, பொருத்தமான தடுப்பூசி விண்ணப்பதாரர்கள் அவசரகால பயன்பாட்டு அங்கீகாரங்களை வழங்குவதற்கு திறந்திருப்பதாக தெரியவருகின்றமையானது உலக மருந்து நிறுவனங்களின் பின்னால் சந்தை பிடித்தலுக் கான போட்டியாக இந்த யுத்த முனை அமைகின்றமை வெளிச்சமாகின்றது.




- அகரதன்

## கெரோனாவைவிடப் பெரிய அச்சுறுத்தல் பருவநிலை மாற்றம்




உலகின் உயிரியல் ஒட்டுமொத்த ஆர்வலர்களும் வழிமீது விழி வைத்து பார்த்துக் கொண்டு இருப்பது உலகில் இப்போது எஞ்சியிருக்கும் ஒரே ஒரு வெள்ளை ஒட்டகச் சிவிங்கி மீது தான். ஆபிரிக்க நாடுகளில்ஒன்றான கென்யாவில் இருக்கிறது உலகின் கடைசி ஒரே ஒரு வெள்ளை ஒட்டகச்சிவிங்கி. பொதுவாக ஒட்டகச் சிவிங்கிகள் இந்த வண்ணத்தில் இருக்காது. ஆனால், அரிதான ஒரு மரபணு நிலையால், வெள்ளை நிறத்தில் இந்த ஒட்டகச்சிவிங்கி இருக்கிறது. பொதுவாக ஆப்பிரிக்காவில், ஒட்டகச்சிவிங்கிகள், மாமிசம் மற்றும் உடல் பாகங்களுக்காக வேட்டையாடப்படுவது வாடிக்கையாக இருந்து வருகிறது.

இந்நிலையில் எஞ்சியிருக்கும் இந்த ஒரேயொரு வெள்ளை ஒட்டகச்சிவிங்கி வேட்டுக்கு இலக்காகி விடுமோ என்ற அச்சத்தில் அதனை கண்காணிக்கும் பொருட்டு ஜீபிஸ் கண்காணிப்பு கருவியினை அதன் மீது பொருத்திவிட்டு, விழித்த கண் மூடாமல் கண்காணித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

கடந்த 30 ஆண்டுகளில் சுமார் 40 வீதமான விலங்குகள், 15 ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து காணாமல் போயுள்ளன. வேட்டையாடுதல் மற்றும் வனவிலங்கு கடத்தல் ஆகியவை ஆப்பிரிக்க வனவிலங்குகளின் கணிசமான சரிவுக்கு தொடர்ந்து காரணமாக இருந்து வருகிறது. உலகம் முழுக்க ஒட்டகச் சிவிங்கி இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் ஒட்டகச்சிவிங்கிகளை அதன் சிவப்பு பட்டியலில் வைத்துள்ளன. பாதிக்கப்படக்கூடிய இனமாக பட்டியலிட்டுள்ளது. உலகின் மிக உயரமான விலங்கு என்று பெயர் பெற்றது ஒட்டகச் சிவிங்கி. இப்போது உலகம் முழுக்க வெறும் 68,293 ஒட்டகச் சிவிங்கிகள் மட்டுமே உள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## இருமலில் மாட்டிய றஸ்ய அதிபர் புதின்!



கொரோனா வைரஸ் தொடர்பிலான காணொளிவழி கூட்டம் ஒன்றில், றஸ்ய அதிபர் புதின் இருமும் காட்சியை தவிர்க்க வீடியோவை “எடிட்” செய்யாத விடயம் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இந்த ஆலோசனை கூட்டத் தொடக்கத்தில் புதினுக்கு திடீரென கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு தொடர்ந்து கடுமையான இருமல் ஏற்பட்டுள்ளது. இதனால், மன்னிக்கவும் என கூறிய புதின், தனது வலது கையை வாயருகே கொண்டு சென்று இருமலை தவிர்க்க முற்பட்டுள்ளார்.

அவர் தனது பேச்சில், ஒரு வாக்கியம் முற்றுப் பெறுவதற்கே கடுமையாக திணறியுள்ளார். எனினும், இதுபற்றிய வீடியோ பின்னர் எடிட் செய்யப்பட்டுள்ளது. இதனால், அவருக்கு கடுமையான உடல்நல பாதிப்புகள் இல்லை என்பது போல் காட்டப்பட்டுள்ளது என்ற சர்ச் சை உலாவத்தொடங்கியுள்ளது. இங்கிலாந்து பிரதமர் பொரிஸ் ஜான்சன், அமெரிக்க அதிபர் டிரம்ப் ஆகியோர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட போதிலும், புதின் கொரோனாவுக்குள் சிக்கவில்லை என்ற நிலையில், எடிட் செய்யப்பட்ட “இருமல்” அவரை சிக்கலுக்குள் தள்ளியுள்ளது. (ஒரு மனுசன் சும்மா கூட இருமக்கூடாதா ?)


## ஐ போனுக்காக தனது கிட்னியை விற்ற இளைஞன்



ஆசை சில வேளைகளில் கண்ணை மறைக்கும் என்பர். சீனாவில் இளைஞர் ஒருவருக்கு ஐ போன் ஆசை, அவரது கிட்னியை மறைத்துவிட்டது. சிறுவயது முதலே ஐ போன் மீது கொண்ட அவரது காதல், கள்ளச்சந்தையில் தனது கிட்னியை விற்கும் நிலையினை ஏற்படுத்தியுள்ளது. 3,273 அமெரிக்க டொலர்களுக்கு தனது கிட்னியை இணையவழி கள்ளச்சந்தையில் விற்றுள்ளார்.

இந்த நிலையில் இவரது இடது கிட்னியில் தற்போது தொற்று ஏற்பட்டுவிட்டு மற்றக்கிட்னி இல்லாத நிலையில் உயிருக்கு போராடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். கிட்னி விற்ற காசில் இவர் வேண்டியவைகள் : ஐபாட் 2, ஐபோன் 4 ஆகும்.


























## கடத்தப்பட்ட சிலையை இந்தியாவிடம் ஒப்படைத்த கனடா



இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலத்தில் 100 ஆண்டுகளுக்கு முன்னர் கோவிலொன்றில் இருந்து கடத்தப்பட்ட அன்னபூரணி தெய்வ சிலையை, கனடாவின் ரெஜினா பல்கலைக்கழகத்தின் மெக்கென்சி கலைக்கூடத்தில் இருந்து இந்தியாவிடம் கனடா ஒப்படைத்துள்ளது.

அன்னபூரணியின் இந்த தனித்துவமான சிலை, இந்தியாவுக்கு மீண்டும் செல்வது எங்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது.


இந்த கலாசார சின்னத்தை இந்தியாவுக்கு திருப்பித்தருவதற்கான செயலில் ஈடுபட்ட ரெஜினா பல்கலைக் கழகத்துக்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

இதுபோன்ற கலாசார பொக்கிசங்களை தானாக முன்வந்து திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கை இந்தியா, கனடா இரு தரப்பு உறவின் முதிர்ச்சியையும், ஆழத்தையும் காட்டுகிறது கனடாவுக்கான இந்திய தூதர் அஜய் பிசாரியா தெரிவித்துள்ளார்.

# அக்கம் பக்கம்

( சிறிலங்கா அரச நலன்களின் நோக்கு நிலையில் இருந்து, அதன் நலன்களை மையப்படுத்தி முன்வைக்கப்படுகின்ற கருத்துக்கள் மீதான பார்வை இது )

## அமெரிக்க தேர்தல் முடிவுகள் : சீன-சிறிலங்கா உறவுகளை மீள்மதிப்பீடு செய்வதற்கான நேரம் !!




கடந்த ஒக்ரோபர் 28ம் நாள் சிறிலங்காவுக்கு சென்றிருந்த அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் போம்பியோ, சீனத்துடன் சிறிலங்காவுக்குள்ள உறவு குறித்துப் வெளிப்படை யாக பேசியிருந்ததோடு, இது குறித்து சிறிலங்கா ஒரு வழியைத் தேர்வு செய்வது கடினம் என்றாலும் அவசியம் என இடித்துரைந்திருதார்.

இந்தியப் பெருங்கடலின் நடுவில் சிறிலங்காவின் மூலோபாய மையமாக இருக்கின்றதென்ற நிலையில், சீன-சிறிலங்கா உறவுகளை மீள்மதிப்பீடு செய்வதற்கான நேரம் வந்து விட்டது என ஆய்வாளர் கணேஸ் விக்னராஜா தெரிவித்துள்ளார். இவர், சிறிலங்கா அரச நலன்களை மையமாக கொண்ட லக்ஷ்மன் கதிர்காமர் அனைத்துலக தொடர்புகள், மூலோபாய மையத்தின் தலைவராகவும், வேறு பல நிறுவனங்களில் முக்கிய பொறுப்புக்களில் வகிப்பவர். அமெரிக்க அதிபர் தேர்தலை மையப்படுத்தி சிறிலங்கா வகுத்துக் கொள்ள வேண்டிய மூலோபாயம் பற்றிய இவரது கருத்துரையின் முக்கிய பகுதிகள் :

1950ஆம் ஆண்டு சிறிலங்கா முதலில் சீனத்தை அங்கீகரித்ததிலிருந்தே இரு நாடுகளிடையே சுமுகமான இராஜதந்திர உறவுகள் நிலவி வருகின்றன. சீனம் ஐக்கிய நாடுகள் அமைப்பில் இணைவதை சிறிலங்கா ஆதரித்தது. 1952ல் ரப்பர்–அரிசி பண்டமாற்று ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் ஒப்பமிட்டன. சீனத்தின் கடன்வலை சர்ச்சைக்குரிய சிக்கலாகவே இருந்து வருகிறது. 2000ம் ஆண்டுகளின் முற்பகுதியிலிருந்தே சிறிலங்காவின் அகக்கட்டமைப்புத் திட்டங்களுக்கு வணிகக் கடன் வழங்குவதில் சீனம் முகன்மையான இடம் பிடித்துள்ளது. இந்தக் கடன்களை ஏற்றுக் கொண்டதால் சிறிலங்கா இப்போது ‘கடன்வலை’யில் சிக்கியிருப்பதாகக் கருது வோர் உண்டு.

பட்டுப்பாதை வலையபெருமுயற்சியின் **(BRI)** திட்டப் பணிகள் வேறொரு சிக்கலாகும். ஒருசில திட்டங்கள் மற்றவற்றைக் காட்டிலும் சிறிலங்காவின் பொருளியலுக்குக் கூடுதலான நன்மைகள் பயத்துள்ளன. இவ்வலயதிட்டப்பணிகள் சிலவற்றின் நன்மைகள் கேள்விக்குரியவையாகவே இருந்து வருகின்றன. இவற்றில் ஒன்று கொழும்பு தாமரைக் கோபுரம் – தொலைத் தொடர்புகளுக்கும் இளைப்பாறலுக்குமான இந்தத் திட்டப்பணி காலந்தாழ்ந்து போயிற்று. சிறிலங்காவில் கட்டுமானத் திட்டங்களுக்காக சீனத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் உள்ளீடுகள் மென்மேலும் உயர்ந்து செல்கின்றன. இதனால் இரு நாடுகளுக்கும் இடையிலான வணிகப் பற்றாக்குறை விரிவடைந்துள்ளது, சீனத் திட்டங்களிலிருந்து ஏற்படும் பொருளியல் பக்க விளைவுகளும் உண்டு. சீனத்திலிருந்து சிறிலங்காவின் செய்பொருளாக்கத் துறைக்குள் நுழையும் அயல் முதலீடு, தொழில்நுட்ப மாற்றல், உள்ளூர் வேலை வாய்ப்புண்டாக்கம் ஆகிய வகைகளில் இந்தப் பக்க விளைவுகள் ஏற்படுகின்றன.

சீனத்தின் அடிச்சுவடு வளர்வதால் சிறிலங்காவின் இறைமை மீறப்படும் ஆபத்து உள்ளது என்றும், இது இந்தியாவின் தென்கரைக்கும் தேசப் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாகும் என்றும் மூத்த இந்திய அதிகாரிகள் கவலைப்படு கின்றார்கள். சீன அரசு நிறுவன மேலாண்மையில் உள்ள அம்பந்தோட்டைத் துறைமுகம் வணிக இராணுவ இரட்டைப் பயன்பாட்டு வசதியாகி விடக் கூடும் என்று கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.




இந்தியாவுக்கு இமயமலைத் தொடரில் சீனத்துடன் மோதல்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து கவலைகள் வளர்ந்தன, இந்தியாவுக்கு நம்பிக்கையூட்டும் பொருட்டு சிறிலங்கா கடற்படை ஒன்றை வலியுறுத்திக் கூறியுள்ளது. அதாவது அயல்நாட்டுக் கப்பல்களின் துறை முகவருகைகளையும் அம்பந்தோட்டையில் பாதுகாப்பையும் தானே மேலாண்மை செய்வதாகத் தெரிவித்துள்ளது. பாதுகாப்புத் துறை சார்ந்து தொடர்ந்து அவ்வப்போது நடக்கும் உரையாடல்கள் மூலமும் கடற்படைப் பயிற்சிகள் மூலமும் சிறிலங்க ஆய்தபடைகளுக்கு இந்தியாவில் பயிற்சியளிப்பதன் மூலமும் இந்தியாவுக்கும் சிறிலங்காவுக்குமான பாதுகாப்பு ஒத்துழைப்பு வலுவாக்கப்பட்டுள்ளது. ஜோ பிடன் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்காக அவருக்குவாழ்த்துக் கூறியுள்ள அதிபர் கோட்டபய இராஜபட்சே அவரோடு இணைந்து இயங்க ஆவலுடன் காத்திருப்பதாகக் கூறியுள்ளார்.

வர்த்தகத்திலும் தொழில்நுட்பத்திலும் அமெரிக்காவுக்கும் சீனத்துக்கும் தொடரக்கூடிய போட்டிகளுக்கு நடுவில் சிறிலங்காவின் சொற்களுக்குப் பொருத்தமாகச் செயல்களும் அமைய வேண்டும் என பிடன் ஆட்சி எதிர்பார்க்கவே செய்யும்.

பெரும் படை இல்லாத சிறு அரசு என்ற என்ற வகையில் சிறிலங்கா வல்லரசகளுடனான உறவுகளில் கண்டிப்பான அணிசாரா கொள்கையைக் கடைபிடித்தாக வேண்டும். சிங்கப்பூரும் நியூசிலாந்தும் இவ்வகையில் கண்டுள்ள வெற்றியைப் பார்த்துக் கற்றுக் கொள்ள வேண்டும். அமெரிக்காவுக்கும் பிற முதலீட்டாளர்களுக்கும் நம்பிக்கையளிக்கும் படியான வெளிப்படைத்தன்மையுள்ள சந்தைசார்ந்த கொள்கைகளை சிறிலங்கா கடைப்பிடிக்க வேண்டும். இந்தியாவின் பாதுகாப்புக் கவலைகளை மேலும் அகற்றும் பொருட்டு, இந் தியாவுக்கும் சிறிலங்காவுக்கும் மாலத்தீவுகளுக்கும் இடையே கடல்சார் பாதுகாப்பு–இடர்காப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளும் வாய்ப்புகளையும் ஆராய வேண்டும். கொவிட்–19க்குப் பிறகான பொருளியல் மீட்சிக்கு சீன உறவுகளை சிறிலங்கா இன்னும் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள இந்த நடைபடிகள் வழிகோலும். இதற்கு வெளிநாட்டுக் கடன் வாங்கும் உறவிலிருந்து வணிகத்துக்கும் முதலீட்டுக்கும் முகன்மை தரும் உறவுக்கு மாறிச் செல்ல வேண்டும். சிறிலங்கா தனக்குக் கடன் கொடுத்த வர்களோடு கடன் நிலைமாறா ஏற்பாடுகள் பேசி முடிக்க வேண்டும். கடன் வாங்குவதும் கடன் மேலாண்மை செய்வதுமான அமைப்புகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். எதிர்காலச் சீனக் கடன் வலை யில் சிக்கக் கூடிய ஆபத்தைக் குறைத்துக் கொள்ள விவேகமான நுண்பொருளியல் மேலாண்மை வாயிலாக அயல் சேம வைப்பு முடையிருப்புகளைக் கட்டியெழுப்ப வேண்டும்.



# விருந்தினர் பக்கம்




கொரோனா வைரஸ் காரணமாக உயிரிழப்பவர்கள் தொடர்பில் உடலை எரிக்கும் சிறிலங்கா அரசின் வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்திருந்தது.

இது முஸ்லீம் சமூ கத்திடையே கோபத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் இது தொடர்பில் சமூக, அரசியல் செயற்பாட்டாளர் **Fauzer Mahroof** அவர்கள் முக்கிய கருத்துக்கள் :

## “உடலங்களை எரிக்கும் இனவாத அரசியலும் இலங்கை அரசாங்கமும்........”



இந்த விடயத்தில் அரசாங்கத்திற்கு எந்த சம்பந்தமுமில்லை என இன்னும் விவாதிப்போர், நம்பிக் கொண்டிருப்போர் இருந்தால் அதனைவிட முட்டாள்தனம் வேறில்லை. எரிப்பதை பிரகடனப்படுத்தியேதே இந்த இனவாத ,எதோச்சதிகார அரசாங்கம்தான்.

கடந்த ஏப்ரல் 4ம் திகதியிடப்பட்ட, இலங்கையின் சுகாதார அமைச்சரும், ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அருமைத் தங்கையுமாகிய பவித்திரா வன்னியாரய்ச்சியின் உத்தரவுப்படியேதான் உடலை எரிக்கும் இந்த இனவாத வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்தது. இந்த வர்த்தமானி அறிவித்தலை நீக்க வேண்டும் என்றுதான் இந்த அனைத்து அடிப்படை உரிமைமீறல் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த அடிப்படை உரிமை மீறல் வழக்குகள், மிகத் தெளிவாகவே இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகவே செய்யப்பட்டுள்ளன. உலக சுகாதார அமைப்பு மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் உட்பட, இலங்கை மனித உரிமை ஆணக்குழு ஆகியன இலங்கை அரசாங்கத்தினையே இதில் குற்றம்சாட்டி உள்ளது. ஆகவே இன்னும் இந்த விடயத்தில் யாரும் இலங்கை அரசாங்கத்திற்கு வெள்ளை அடிப்பது வீணாண செயல் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

இலங்கை நீதிமன்றம் நடந்து கொள்ளும் முறையில்தான், இலங்கையின் நீதித்துறையிலும் இலங்கை முஸ்லிம்கள் நம்பிக்கை வைக்க முடியுமா என்கிற கேள்விக்கு பதில் கிடைக்கும். கடந்த காலங்களில் பெருமளவிலான சந்தர்ப்பங்களில் இலங்கை நீதித்துறை ஆளும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள்ளும், இனவாத நோக்கிலும் தனது தீர்ப்புகளை வழங்கியே வந்துள்ளன. அரசாங்கத்தின் முடிவுகளை கேள்விக்குற்படுத்திய நீதித்துறை தீர்ப்புகள் இல்லை என்று சொல்ல முடியாது,

ஆனாலும் அதனை விரல் விட்டு எண்ணி விடலாம். இறந்த முஸ்லிம்களின் உடலை எரிக்கும் அடிப்படை உரிமை மீறல்களுக்கு எதிராக தொடரப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை, கிட்டத்தட்ட 6 மாதங்கள் கடந்துதான் விசாரணைக்கே எடுக்கப்பட்டுள்ளது.



இன்னும் ஏன் உங்கள் அரசியல், ஆளும் , ஒடுக்கும் தரப்பின் தயவில், அவர்களது சப்பாத்துக் கால்களை துடைத்துக் கொண்டிருக்கிறது ? எரித்தது எரித்ததுதான்..., உடல்களை மட்டுமல்ல வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் மனங்களையும் தான். அந்தக் கறையை யாராலும் துடைக்க முடியாது! நீங்கள் வகிக்கும் அமைச்சுப் பதவிகளும், இன்னும் அதற்காக ஏங்கிக் கொண்டிருக்கும் ஆதரவு அரசியலும் , இதனை ஒரு போதும் ஈடு செய்யாது!




# கனடா வரும் தமிழினப்படுகொலையாளி அணிதிரளும் தமிழர்கள்

கனடாவுக்கான சிறிலங்காவின் தூதுவராக நியமனம் பெற்றுள்ள போர்குற்றவாளியான ஏர்மார்செல் சுமங்கள டயசுக்கு எதிராக கனேடிய தமிழர்கள், அமைப்புக்கள் தமது எதிர்ப்பினை காட்டத் தொடங்கியுள்ளனர்.

கனேடிய தமிழர் அமைப்புக்களின் நீதிக்கான கூட்டமைப்பு எனும் பெயரில் அணிதிரண்டுள்ள தமிழர் அமைப்புக்கள் போர் குற்றவாளியின் வருகைக்கு எதிரான அழுத்தத்தினை கனேடிய அரசாங்கத்துக்கு காட்டத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை கையெழுத்து வேட்டையும் இவரது வருகைக்கு எதிராக இடம்பெற்று வருகின்றது.




# இலங்கைத்தமிழ் சங்கம் – அமெரிக்கா நடாத்தும் இணையவழி கலைவிழா

அமெரிக்காவில் இயங்கிவரும் இலங்கைத்தமிழ் சங்கம் தனது 43 ஆவது ஆண்டு விழாவினை இணையவழியே பெருவிழாவாக நடாத்துகின்றது.

எதிர்வரும் டிசெம்பர் 12,13 ஆம் தேதிகளில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் 25க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து நிகழ்வுகள் இடம்பெற இருக்கின்றன.

சிறப்புரைகள், பாடல்கள், நாடகம், நடனம் என பல்சுவை நிகழ்வாக இடம்பெறவுள்ள இந்நிகழ்வினை இணையவழியே YouTube.com/ILankai Tamil Sangam America இத்தொடுப்பு மூலம் காணலாம்.




# YouTube தளத்தில் BORDER குறும்படம்




இலங்கை – இந்திய தமிழ் மீனவர்களதுநெருக்கடியினை மையக்கருவாக கொண்டுபல குறும்பட விழாக்களில் விருதுகளைப் பெற்ற BORDERகுறும்படம் YouTube சமூகவலைத்தளம் வழியே பொதுப்பார்வைக்கு வந்துள்ளது.

பாக்கு நீரணையில் சிறிலங்கா கடற்படையால் படுகொலை யாவதும் காயப்படுவதுமான மீனவர்களது வாழ்வு பற்றியதான இக்குறும்படம் தாயகத்தில் இருந்து வெளிவந்த முக்கியமானதொரு குறும்படமாகவுள்ளது.

இரண்டு தேசங்களுக்கிடையே பெரும் கடற்கரையை பூர்வீக மண்ணாகப் பெற்ற நெய்தல் தமிழர்களது வாழ்வின் இன்றைய நிலை யின் ஒரு குறுக்கு வெட்டுமுகத் தோற்றத்தை கதைக் கருவாக்கி 23 நிமிடங்கள் இக் குறும்படம் ஒடுகின்றது.

17வருட சிறை வாசத்தின் பின்னர் விடுதலையாகி கடற்றொழிலை ஆரம்பிக்க வந்த நாயகனை நோக்கி – முன்னர் தோணியில் ஆயுதம் கடத்தினாய், இப்ப உனக்கு அதை வாடகைக்கு விட்டால் கஞ்சாகடத்துவாய் எனவாக குத்திக்காட்டும் நகராக வரும் கொலின் ஜுல்ஸ் பிரான்சிஸ் மற்றும் இரு கால்களும் இல்லாத நம்பிக்கையுடன் வாழும் சிறப்புப் பாத்திரமும் மனதில் நிலைபெற்று விடுகிறார்கள்.

இலங்கையிலும் இந்தியாவிலும் தயாரிப்பான இந்தக் குறும்படம் இரண்டரை இலட்சஇலங்கை ரூபாய் செலவில் முழுமை பெற்றிருக்கிறது.

கடலோடான வாழ்வில் கடல் மேலும்,நீருக்குள்ளும் புகுந்த கமெரா வழியில் சொல்லப்படும் கதை. அக்கதை காவிய மார்க்சிய நோக்கு இன்றைய உலகமயமாகிய பொருளாதாரச் சூழலில்கடல் வளம் சிதைப்புக்குள்ளாகும் கோரத்தை இலகுவாகச் சொல்லி விடுகிறது.

நீரின்நடு 'எல்லை'யில் இருநாட்டுமீனவர்கள்சந்திக்கும் போது நிக ழும் நீண்ட உரையாடல் வெவ்வேறு மனநிலையில் தத்தமது வாழ்வாதாரப் பிரச்சினையை நோக்கும் பார்வையாளர்களை நோக்கிய உரையாக அமைந்துவிடுகிறது.

நாளாந்தம் செய்திகள் வாராந்தம் கட்டுரைகள்
மாதம்தோறும் பத்திரிகையாக


www.eelamann.com